சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
பங்குனி 13
ரபி. ஆகி. 16
ஞாயிறு (26-3-1978)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 83
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 60

# பௌத்த சிங்கள தேசியத்தன்மை குன்ருது

# இலங்கையின் நவீன வரலாறு எழுதப்படுமாம்!

## அரசு நியமித்த குழுவில் தமிழர் எவருமில்லை!

டொனமோர் அரசியல் திட்டக்காலத்துக்கு பிற்பட்ட இலங்கையின் வரலாற்றை எழுதுவதற்கு இலங்கை அரசாங்கம் 25பேர் கொண்ட ஓர் குழுவை நியமித்துள்ளது. இக்குழுவில் ஒரு தமிழர் கூட இடம்பெறவில்லை. இந்தக்குழுவினர் வரலாற்று நூலான மகாவம்சத்தின் மரபைப் பின்பற்றி புதிய வரலாற்றை எழுதுவார்களாம். சிங்கள பௌத்த தேசியத்தன்மையை கட்டிக்காப்பாற்றும் விதத்தில்புதிய வரலாறு எழுதப்படுமாம்.

1935ம் ஆண்டு டொனமூர் அரசியல் திட்டக் காலத்திலிருந்து அதற்குப் பிற்பட்ட 43ஆண்டுகால வரலாற்றை— 1978ம் ஆண்டு ஜே. ஆர். ஜெயவர்த்தன ஜனாதிபதியாக முடி சூட்டிக் கொண்டதுவரை — எழுதுமாறு இந்தக்குழுவுக்கு அரசாங்கம் பணிப்புரை விதித்துள்ளது. இலங்கைத்தீவின் பிந்திய வரலாற்றையும் சிங்கள பௌத்த வரலாருகவே முழுக்க முழுக்க காட்டுவதற்கும், இலங்கையில் தமிழர்கள் நடத்தி வரும் தேசிய விடுதலைப் போராட்டத்தை முற்ருக இருட்டடிப்பு செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக தமிழர்கள் சந்தேகிக்கிருர்கள்.

இந்த வரலாற்றுக்குழுவில் 25சிங்கள அறிஞர்கள் இடம் பெற்றுள்ளனர். இவர்களில் 15பேர் பௌத்தபிக்குகளாவர். இக்குழுவில் ஒரு தமிழர் கூட இடம் பெறவில்லை. தமிழர்களை வந்தேறு குடிகள் என்றும் இன்னும் பல வழி›ளிலும் தமிழ் மக்களை அவமதித்து சிங்கள இனவெறியை வளர்த்து வரும் மடிகே பஞ்ஞாசிக தேரோவும் இதில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

சிங்களவர்கள் தமது வரலாற்றை எப்படியும் எழுதட்டும்; ஆனல் தன்னை இன, மத, வேறுபாடற்ற தர்மிஷ்ட அரசு என்றுகூறிக் கொள்ளும் ஜெயவர்த்தனவின் அரசு, மக்களின் வரிப்பணத்தில் இந்த வரலாற்று நூலை எழுதவிருக்கிறது; அப்படி அரசு எழுதுவிக்கும் வரலாற்று நூல் உண்மை நிகழ்ச்சிகளை கொண்டதாக அமையாமல் பௌத்த சிங்கள தேசிய அடிப்படையில் எழுதப்படுவதும், இக்குழுவுக்கு தமிழ் வரலாற்ருசிரியர்கள் நியமிக்கப்படாததும் ஏன் என்று தமிழ்மக்கள் கேட்கின்றனர்.



பிரிட்டனில் கல்வி பயிலும் வெளிநாட்டு மாணவர்களுக்கு பாரபட்சம் காட்டப்படுவதை எதிர்த்து பல்வேறு நாடுகளின் மாணவர் மன்றங்கள் லண்டனில் ஆர்ப்பாட்டம் நடத்தின. முற்போக்கு மாணவ சமுதாயத்துடன் இணைந்து அவர்களுக்காக குரல்கொடுப்பதன் மூலம், ஈழத்தமிழர் விடுதலையின் பால் அவர்களது கவனத்தை ஈர்க்கும் நோக்குடன் லண்டனிலுள்ள ஈழமாணவர் பொதுமன்றமும் இதில் கலந்து கொண்டது.

● ஈராக்கிலும் இனவெறி

# தமிழ் இளைருக்கு கத்திக்குத்து

## ஐந்து சிங்களவர் விளக்கமறியல்!

வேலைதேடி வெளிநாடுகள் சென்றுள்ள சிங்கள இளைஞர்கள் அவ்விடங்களிலும் தங்கள் சிங்கள வெறியை காண்பித்துள்ளார்கள் என்ற செய்திகள் எமக்குக்கிடைத்திருக்கின்றன. இதன் பொருட்டு அந்நாட்டு அரசாங்கம் இலங்கையிலிருந்து சென்றவர்களை திரும்பவும் இலங்கைக்கு அனுப்பிவிட ஆலோசித்து வருகின்றனவாம்.

ஈராக்கில் சிக்கோ(SIX-CO) ஸ்தாபனத்தில் கடமையாற்றும் சிங்கள இளைஞர்கள் சிலர் அந்தஸ்தாபனத்திற்கு பெரும் தலையிடியை கொடுத்த வண்ணம் இருக்கின்றனராம். அண்மையில் ஆகாசா

—5-ம் பக்கம் பார்க்க

## அன்னை மணியம்மையார் மறைவு!

தன்மான இயக்கத் தலைவர் தந்தை பெரியார் ஈ.வே.ரா. அவர்களின் துணைவியாரும், பெரியாருக்குப் பின் திராவிடக் கழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று அதை வழிநடத்திவந்தவருமான திருமதி மணியம்மையார் அவர்கள் சென்னையில் காலமானுர், அன்ருரது இறுதிச்சடங்குகளில் தமிழக முதல்வர் எம்.ஜி ஆர், தமிழக எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு. கருணநிதி, மற்றும் அமைச்சர்கள், திராவிட இயக்கப் பிரமுகர்கள், தலைவர்கள் கண்ணீர் உகுத்தவண்ணம் கலந்துகொணடனர்.

திராவிட இயக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு பல தடவை சிறைசென்ற திருமதி மணியம்மையார், இறுதியாக அண்மையில் இந்திரா காந்திக்கு எதிராக கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றவர் எனபது குறிப்பிடத்தக்கது

மணியம்மையாரின் மறைவு குறித்து, திராவிடக் கழக பொதுச்செயலாளர் திரு. கி வீரமணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் திரு. அ.அமிர்தலிங்கம் அனுப்பிவைத்துள்ள இரங்கற் தந்தியில் மணியம்மையாரின் பிரிவு குறித்து, ஈழத்தமிழர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஆழ்ந்த துயரம் அடைவதாக குறிப்பிட்டிருந்தார்.

மணியம்மையாரின் மறைவால் துயருறும் திராவிட இயக்கத்தினருக்கு சுதந்திரன் சார்பில் நாமும் நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிருேம்.

திராவிடக் கழகம் எதிர்காலத்தில் தலைவரின்றியே இயங்குவதென்று தீர்மானித்துள்ளது. —ஆர்

# சொன்னதை செயலில் காட்டி

# வெற்றியீட்டினர் கூட்டணியினர்

## தேர்தல் ஆணையாளர் பெருமிதம்!

தேர்தல் ஆணைக்குழுவுக்கு தாம் கொடுத்த உறுதிமொழிப்படி உடுப்பிட்டித் தொகுதியில் பிரதிநிதித்துவமில்லாதிருந்த சிறுபான்மைத்தமிழ் மக்களின் சார்பில் திரு. இராஜலிங்கம் அவர்களை கூட்டணி வேட்பாளராக நியமித்து அவரை பெரு வெற்றியீட்டவைத்த தமிழர் விடுதலைக்கூட்டணியினரின் செயலை "பெருமைக்குரியது" என்று தேர்தல் ஆணையாளர் திரு, டயஸ் அபயசிங்க அவர்கள் புகழ்ந்து பாராட்டியிருக்கிருர்.

இலங்கை தேசிய அரசுப் பேரவையின் 1977ம் ஆண்டு ஜூலை 21ம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தல் பற்றி தேர்தல் ஆணையாளர் திரு. ... அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். இந்த அறிக்கையை அரசாங்கமும் அங்கீகரித்துள்ளது. இந்த அறிக்கையிலேயே தமிழர் விடுதலைக்கூட்டணியை திரு. அபயசிங்கா பாராட்டியிருக்கிருர். அதன் விபரம் வருமாறு:—

"உரிமையற்றவகுப்பினர்" என்று அழைக்கப்படும் சிறுபான்மைக் குழுக்கள் இந்நாட்டின் சகல பகுதிகளிலும் குழுக்கள் குழுக்களாக சிதறிவாழ்கின்றனர். இதனல் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணய ஆணைக்குழுவினுல் அவர்களுக்கென தனியானதோர் தொகுதியை வரையறை செய்வது சாத்தியமாகாது.

அவ்வப் பிரதேசங்களிலுள்ள பெரிய கட்சிகளின் வாயிலாக ஒன்ருே அல்லது அதற்கு மேற்பட்ட தொகுதிகளிலோ சிறுபான்மையினர் நியமனம் பெறுதலே இதற்கான தீர் வாகும் எனவும் ஆணைக்குழுஏற்கெனவே விளக்கியிருந்தது.

தகுந்த இடங்களில் சிறுபான்மைக்குழு உறுப்பினர்களுக்கு நியமனம் கொடுக்கப்படுமென தமிழர் விடுதலைக்கூட்டணிப் பிரதிநிதிகள் ஆணைக்குழுவினருக்கு உண்மையாகவே கூறினர். அவர்கள் கூறியபடியே தமது தொகுதிகளில் ஒன்றை சிறுபான்மையினரின் பிரதிநிதிக்காக ஒதுக்கியதோடு அப்பிரதிநிதி அமோக வாக்குகளைப்பெற்று வெற்றியீட்டியமையும் பெருமைக்குரியதாகும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக்குரல்



அ. பரந்தாமன்,
தெமட்டகொட.

கே: கொமியூனிஸ்ட்வாதிகள் சீதனம் வாங்குவதில்லையாமே இதைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: சீதனம் வாங்குதில்லையென்று ஊருக்குக் கூறிக்கொண்டே பின்கதவால் சீதனம் வாங்கிக்கொண்ட கொம்யூனிஸ்டுகளை நான் அறிவேன். சீதனம் என்பது தமிழ் சமுதாயத்தின் ஒரு பீடை. கொம்யூனிஸ்டுகள் மட்டுமல்ல — எந்த ஒரு 'இஸத்'தைப் பின்பற்றுகிறவர்களும்கூட சீதன முறையை ஒழித்துக்கட்ட தூய்மையுடன் உழைக்கவேண்டும்.

ஃ

க. சிம்கராஜ்,
பண்டித்தரிப்பு.

கே: 1977 ஆகஸ்டில் ஏற்பட்ட கலவரம் போன்று இன்னோர் கலவரம் ஏற்படுமா? நாம் அதை எதிர்பார்க்கவேண்டுமா?

ப: சிங்களவர் ஆதிக்கபுரியினராகவும், தமிழ்மக்கள் ஆளப்படும் நிலையிலும் இருக்கும்வரை இத்தகைய வெறியாட்டங்கள் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கும். கலவரங்களை கண்டு நாம் ஓடிவிடமுடியாது ஒவ்வொரு இனக்கலவரமும் எமது தமிழ்ஈழ இலட்சியத்திலுள்ள நியாயத்தை எடுத்துக்காட்டுகின்றன. இன்னோர் கலவரம் மூளுமானால் அடிவாங்கும் இனமாக இல்லாமலிருப்பதற்கு தமிழ்மக்கள் தம்மை தயார்படுத்த வேண்டும்.

ஃ

பொன். பூலோகசிங்கம்,
கொழும்பு வளாகம்,

கே: யாழ்ப்பாணத்தில் வாங்கிக் கட்டிக்கொண்ட 'இடதுசாரி முன்னணிக் கட்சிகள்' இனிப் பழைய அரசியலைப் பேசுவதில்லை எனக் கூறியிருக்கின்றார்கள் இது எதைக் காட்டுகிறது?

ப: வன்முறையில் நம்பிக்கையுள்ளவர்களுக்கு அந்தமுறையில்பதில் கிடைக்கும்போதுதான் ஞானம் ஏற்படுகிறது!

ஃ

யே. பெனிற்ரே. யுவராஜ்,
க. பொ. த. (உயர்தரம்)
மானிப்பாய் இந்துக்கல்லூரி
மானிப்பாய்.

கே: சிங்கள இன மக்களின் எதிர்க்கட்சித் தலைவர் அமிரைப்பற்றி தங்களுடைய கருத்து என்ன?

ப: அமிர், சிங்கள இன மக்களின் எதிரி அல்ல; செந்தமிழ் மக்களின் உரிமைக் காவலர் சிங்கள ஏகாதியத்தியத்தின் முதலாவது எதிரி!

ஃ

நா. தியாகராசா,
கணேஸ்வரம்,
அளவெட்டி

கே: புத்த சமயத்துக்கும் இந்து சமயத்துக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன?

ப: இந்து சமயம் தாய்; புத்த சமயம் சேய்; தெய்வ நம்பிக்கையை அடிப்படையாகக்கொண்டு இயங்குவது இந்து சமயம்; தெய்வ நம்பிக்கையற்றது புத்தசமயம்; போதுமா?

கே: புத்த பகவான்பிறப்பால் ஓர் இந்து—அதற்குரிய ஆதாரங்கள் என்ன?

ப: புத்தபகவான் சித்தார்த்தராகப் பிறந்தபோது இந்தியாவில் புத்தமதம் என்றோர் மதமே இருக்கவில்லை; இந்துமதம் ஒன்றுயட்டும்தானே எங்கும் பரவியிருந்தது!

ஃ

செல்வி. தமிழீழச் செல்வி
பொன்பதி,
உடுப்பிட்டி.

கே: இப்போதெல்லாம் பாராளுமன்றத்தில் கூட்டணிப்பக்கத்திலிருந்து ஆங்கில வாடை கடுமையாக வீசுகிறதே இனிப் போகப் போக சிங்களத்தால் பேசினால் கூட ஆச்சரியப்படமுடியாதுபோலிருக்கிறதே!

ப: போகப் போக என்ன? ஒருவர் ஏற்கெனவே சிங்களத்தில் கவிதைகூடப்பாடிவிட்டார்! கூட்டணி பா. உக்கள் ஆங்கிலத்தையே கட்டியழாது, முடிந்தவரை தமிழில் பாராளுமன்றத்தில் பேசவேண்டும் மும்மொழித் திட்டத்தைப்பற்றிப் பேசும் ஆளுங்கட்சி பா. உக்கள், தமழ் பா. உக்களின் தமிழ்ப் பேச்சைப் புரிந்துகொள்வதற்காக முதலில் தாமே தமிழ் படிக்கிறார்களா பார்ப்போம், (பேரவையில் மொழி பெயர்ப்பு வசதிகள் உள்ளன என்பதையும் நான் மறக்கவில்லை.)

ஃ

ரி. கபிரியேல்,
விடத்தல் தீவு,
மன்னார்.

கே: எம் தமிழ்த் தலைவர்கள் தனிநாடு கோரிக்கையின் மீது ஐ. தே. கட்சியினருக்கு அவகாசம் கொடுத்தார்களே அந்த அவகாசம் எத்தனை நாட்கள் வரைக்கும் என்பதை கூறமுடியுமா? அல்லது ஆறுவருடகாலமும் அவர்கட்கு அவகாசம் கொடுப்பார்களா?

ப: ஆறுவருடம் வரை அவகாசம் கொடுத்தால், ஆருவது வருட முடிவில் தமிழ்த் தலைவர்களை வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள் தமிழ் மக்கள் என்பது தமிழ் தலைவர்களுக்குத் தெரியும்!

ஃ

பி. ஆர். சந்திரன்,
கோப்பாய்.

கே: நீங்கள் தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டம் பற்றிய படம் ஒன்று தயாரித்தால் என்ன?

ப: கொஞ்சம் பொறுங்கள்-இன்னும யாராவது வில்லன்கள் உருவாகிறார்களோ என்று பார்த்து விட்டு அதிலே ஈடுபடலாம்!

ஃ

(பெயர் தரப்படவில்லை)

கே: பிரதமர் ஜே. ஆர். ஜெயவர்தன ஜனாதிபதியானதற்கு காரணம் என்ன?

ப: அவர் ஒரு சிங்களவராகப் பிறந்து, சிங்கள மக்களின் நம்பிக்கையை 1977 பொதுத்தேர்தலில் வென்றுக் கொண்டதும், [illegible] மூளையை சரியாகப் பயன்படுத்திக்கொண்டதும்தான்!

ஃ

செல்வன். செ. ராஜன்,
கண்டி.

கே: சுதந்திரத்துக்காக பாடுபடும் தாங்கள் மலைநாட்டு தமிழருக்கு கூறும் புத்திமதி என்ன?

ப: சுதந்திரமாக வாழ்ந்திட சுதந்திர நாட்டை அமைத்திட, தமிழ்ஈழம் நோக்கி வருக!

ஃ

இரத்தினம் ரவீந்திரன்,
அரியாலை
யாழ்ப்பாணம்.

கே. தமிழ் ஈழம் கிடைத்ததும் நாம்எல்லாம் முதலில் என்ன செய்வோம்?

ப: தமிழ் ஈழத்தின் விடுதலைக்காக இரவு பகலாக உழைத்தவர்களை, உயிர்த்தியாகம் செய்தவர்களை அடியோடு மறந்து விடுவோம்!

ஃ

செல்வி மலர்விழி
சின்னத்துரை.
ஹெந்தலை.

கே: தமிழர் பிரச்சினை தீர்ப்போரின் தார்மீக சமுதாயமும் உருவாகி விட்டது. இன்னும் எவ்வளவு நாட்களுக்குத்தான் நாம் 'இலவுகாத்த கிளிகளாக' இருக்க வேண்டுமோ?

ப: நாம் இலவுகாத்தகிளிகளாக யாரும் யாருடைய கையையும் எதிர்பார்த்துக் காத்திருக்கவேண்டியதில்லை. நமது தமிழ் ஈழத்தாயகத்தின் சுதந்திரத்தை வென்றெடுப்பதற்கு நாம் மேற்கொண்டுள்ள பயணத்தை நம்பிக்கையோடு தொடருவோம்!

ஃ

ரி. அருள்ராசா,
கண்டி வீதி,
கனகநாயகன் குளம்.

கே: தலைவர் அமிர்தலிங்கத்தின் பதவிக் காலத்தில் தமிழ் நாடு கிடைக்குமா?

ப: அவரது 'பதவி' யென்று நீங்கள் குறிப்பிட்டிருப்பது தமிழினத்தின் தலைமைப் பதவியென்றே கருதுகிறேன். அமிர் தலைமையில் தமிழ்ஈழம் அமைய வேண்டுமென்பது தமிழ் தலைவர் தந்தை செல்வாவின் ஆசைக்கனவு. அந்தக் கனவைநிறைவேற்ற அமிர்தலிங்கம் அவர்களும் கூட்டணியினரும் தமிழ்மக்களும் தீவிரமாக உழைக்க வேண்டும்.

ஃ

எஸ். ஏ. மயம்,
சித்தன் கேணி.

கே: மாவட்ட மந்திரிப் பதவியை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஏற்று, தமிழ் ஈழப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு [illegible] படுத்தலில் என்ன?

ப: அதிகாரம் என்ற கூர்மையற்ற மொட்டைக்கருவி அது, அந்தக் கருவியின்பிடி ஜனாதிபதியிடமே எப்போதும் இருக்கும்—இந்நிலையில் அப்பதவியைப் பயன்படுத்தி நீங்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு பெரிதாக எதையும் சாதித்துவிடமுடியாது; மாறாக விடுதலை இயக்கமே வீழ்ச்சியடையும்!

ஃ

மா. ரூபநேசன்,
அச்சுவேலி வடக்கு.

கே: முன்பு போல சுதந்திரனில் 'கார்டூன்' படங்கள் வெளியிட்டால் மேலும் சிறப்பாக இருக்குமே?

ப: அதற்குத்தான் தகுந்த 'கார்ட்டூனிஸ்டை' தேடுகிறேன் தேடுகிறேன்—இன்னும் தேடிக்கொண்டேயிருக்கிறேன்...?

கே: வாலறுந்த நரியை நாம் பாடப்புத்தகத்தில் பார்த்திருக்கிறோம்; நீங்கள் எங்காவது பார்த்ததுண்டா?

ப: கடந்த பொதுத்தேர்தலில் பாறி விழுந்த மரத்தின்கீழ் சிக்கி அதன் வால் அறுந்துவிட்டது. இப்போது அறுந்த வாலுடன் ஆங்காங்கே ஊளையிட்டுக் கொண்டுதிரிகிறது. சமீபத்தில் உங்கள் ஊரில் கூட தலை காட்டி, அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டதாக கேள்வி.

ஃ

வி. எம். இராமச்சந்திரன்.
அளகொல்ல,
அபுகஸ்தலாவை.

கே: தமிழர் முற்பிறவியில் என்ன பாவம் செய்தார்கள்? ஏன் கடவுள் இப்படித் தண்டிக்கிறார்?

ப: முற்பிறவியில் மட்டுமல்ல, இப்பிறவியிலும் தம்முன் ஒரு பகுதியினரை தீண்டாதார் என்று கூறி சாதியடிப்படையில் தள்ளிவைத்துப்பாரபட்சம் காட்டுவது தான் தமிழன் செய்யும் பாவம்! அதற்காகவே கடவுள் தண்டனை கிடைக்கிறது!

கே: தமிழன் என்று சொல்லவே இன்று பயமாயிருக்கிறதே!

ப: தமிழன் என்று சொன்னதும் மாற்றார் அஞ்சுகின்ற காலம் விரைவில் வந்தே தீரும். நம்பிக்கையோடு இருங்கள்!

ஃ

மு. சதாசிவம்,
கனகராயன் குளம்.

கே: தற்போதைய சிறிலங்காப் பிரதமரைப்பற்றி சில வரிகள் கூறுங்கள்!

ப: ஐக்கியதேசியக்கட்சியின் அடிமட்டத்தொண்டராக இருந்து கட்சிக்குதான் ஆற்றிய தன்னலமற்றசேவையால் கட்சியினரின்பேராதரவைப்பெற்று தலைவராகி, இன்றுபிரதமர் பதவியை அலங்கரிக்கும் திரு. பிரேமதாசா, ஓர் உண்மையான தொண்டன் விசுவாசத்துடன் தான் சார்ந்த கட்சிக்கு பணியாற்றினால் உயர்ந்த இடத்துக்கு வரலாம் என்பதற்கு இலக்கணமாக திகழ்கிறார்.

ஃ

சி. அருள் ஆனந்தம்,
மெயின் வீதி,
ஜா-எல.

கே: கலவரத்துக்கு பின்னர் மீண்டும் சிங்களப்பகுதிக்கு திரும்பிவரும் தமிழருக்கு நீங்கள் கூறும் அறிவுரை யென்ன?

ப: மறுபடியும் அடிவாங்கிக்கொண்டு, அல்லது உடமைகளைப் பறிகொடுத்துவிட்டு தமிழ் ஈழத்துக்கு ஓடிவராதீர்கள். தமிழன் அடிவாங்கிய காலத்தை மாற்றியமையுங்கள்!

ஃ

இரா. கீதபொன்கலன்.
மாரிசன் கூடல்
இளவாலை,

கே: சீனவெடிக்கும் குண்டு வெடி சத்தத்துக்கும் பேதம் தெரியாத காவல் துறையினர் இருக்க வேண்டிய இடம் யாது?

ப: இரு சத்தத்துக்கும் உண்மையிலே பேதம் தெரியாமல் இருந்தார்களா அல்லது மக்களைத்தாக்கும் குறிக்கோளுடன் பேதம் தெரியாதது போல பாவனை செய்துகொண்டு மக்களைத் தாக்கினார்களா என்பது அம்பலத்துக்கு விரைவில் வரும். நீங்கள் கேட்ட கேள்விக்கு நேரடியானபதில்—அங்கொடை!

கே: சன்சோனிக்கமிஷன் விசாரணைகள் பற்றியவிபரங்களை வானொலியில் கேட்க முடியவில்லையே!

ப: "போர்என்றால் போர், சமாதானம்என்றால் சமாதானம்" என்ற ஜே ஆரின் (அ)தர்மிஷ்ட கருத்தை அடிக்கொருதரம் ஒலிபரப்பி இனக்கலவரத்துக்கு மேலும் எண்ணெயூற்றியது வானொலி தானே! ஒரு குற்றவாளியிடம் நீதியை எதிர்பார்க்க முடியுமா என்ன?

ஃ

சி. செல்லப்பா,
சிறுப்பிட்டி.

கே: வட்டுக்கோட்டை தேசிய பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு அவர்கள் பற்றி சில வார்த்தை கூறுங்கள்!

ப: தமிழ் ஈழத்தை மூடியிருந்த 'பனி'யை அடியோடு விலக்கி சுதந்திர ஏணியை வட்டுக்கோட்டைத் தொகுதியில் மறுபடியும்ஏற்படுத்தி வைத்த உதயசூரியன் 'பப்ளிசிட்டி' எதையும் நாடாது பணியொன்றையே குறிக்கோளாக கொண்ட ஒரு கர்ம வீரர். சகலருடனும் தோழமையுணர்வுடன் பழகுபவர் தமிழ் ஈழம் அமையும்போது அதன்கைத்தொழில்அமைச்சராக பதவிவகிக்கக் கூடிய ஆற்றலும் செயல்திறனும் படைத்தவர். "நியமனங்கள், கோட்டாக்கள். இடமாற்றங்கள் போன்றவற்றைக் கவனிப்பது அல்ல என் வேலை; எனது முழுநேரத்தையும் இனவிடுதலைக்காக செலவிடப்போகிறேன்" என்று திருநாவுக்கரசு அண்மையில் பேசியிருந்த கருத்து எனக்கு இனித்தது.

★ கேள்விகள் அனுப்ப வேண்டிய முகவரி:-

திருவாளர் குயுக்தியார்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அவர்கள் போராடுகிருர்கள்.... ஆனல் நாம்....?

## அரசியல் மடல்

அன்பு நண்பா

அவன் ஓர் துடிப்புள்ள இளைஞன்; அவன் பெயர் ஆஸாத் அயூப்; அவனது கண்களில் விடுதலைத் தீ கொழுந்து விட்டெரிகிறது; அவன் வயதோ இருபத்தி மூன்று; அவன் பிறந்தது வளர்ந்தது எல்லாம் அகதி முகாமில் தான்; தன் தாயகத்தைப் பறிகொடுத்தவன் அவன்; தனது தாய் நாட்டையே அவன் இதுவரை கண்டதில்லை; அந்த மண் மீது மிதித்ததுமில்லை; இழந்த தாயகத்தை மீட்டிடப் போராடும் தீவிர விடுதலை இயக்கத்தில் அவன் ஓர் உறுப்பினன்; அவன் முகத்தில் ஒளிவெள்ளம் பாய்ந்திட, பெருமிதம் தவழ்ந்திட, மகிழ்ச்சியுடன் உறுதியெடுக்கிருன்—

"முப்பது ஆண்டுகளுக்கு முன் என் தாத்தாவும் பாட்டியும் எந்தத் தாயகத்தை பறிகொடுத்துவெளியேறினர்களோ—அதே தாய்த் திருநாட்டை மீட்பதற்கு எனது கடைசித் துளி இரத்தத்தையும் அளிப்பேன்"

இந்த இளைஞனின் உறுதியும் வீரமும், தாயக விடுதலை வேட்கையும் இம்மட்டென்ருல் — இவனைப் பெற்றெடுத்த வீரத்தாயின் வேகமோ நம்மைச் சிலிர்த்திட வைத்திடுகிறது; புலி படுத்திருந்த குகையல்லவா அவள்? அகதிமுகாமில் தன்னுடைய குடிசையில் இருந்த அந்த வீரமங்கை, அடுக்களையில் உள்ள அலுமாரியைத் திறந்து அதற்குள்ளிருந்து ஓர் பொருளை மிகவும் புனிதமான ஒரு பொருள் போலக்கருதி எடுத்து வருகிருள்; அது ஓர் ஏகே-47 றைபிள் துப்பாக்கி; அந்தத் துப்பாக்கியை அக்குடும்பத்தினர் அடுக்களை அலுமாரிக்குள் வைத்துப்பாதுகாத்து வந்திருக்கிருர்கள்.

அந்தத்துப்பாக்கி அவர்களது குடும்பச் சொத்து; தாயக விடுதலைப் போரில் தன்னுயிரீந்திட்ட அவளது கணவன் அயூப் தன் குடும்பத்துக்காக விட்டுச் சென்ற பிதுரார்ஜிதச் சொத்து அது; அந்தத் துப்பாக்கியை கண்களில் ஒளி பொங்கிட பெருமையுடன் எடுத்துக் காட்டினுள் அந்த வீரத்தாய்; பின்னர் ஆக பன்னிரண்டு வயதே நிறைந்த தன்னுடைய சின்னஞ்சிறு மகளை — ஆஸாத்தின் தங்கையை அழைத்தாள் அந்த அன்னை; அந்தச் சிறுமியின் கரங்களிலே துப்பாக்கியை கொடுத்தாள்; சிறுமியல்லவா? அதனல் முன்பின் தெரியாதவர்கள் அங்குநின்றதைப்பார்த்து சற்று வெட்கப்பட்டாள்; ஆனலும் அன்னையின் வற்புறுத்தலின் பேரில் ஒரு மணித்துளியில் அந்தத் துப்பாக்கியை தனித்தனியாகக் கழற்றி பின்னர் இணைத்துக் காட்டினுள் அந்த சிறுமி!

"தேவையேற்படும் பட்சத்தில் கண்ணை மூடிக்கொண்டும் எனது மகளால் இதைச் செய்திட முடியும்; எனது பிள்ளைகள் எல்லோரும் ஒரு நாள் எமது தாயகத்தின் அடிமைத்தளையறுத்திட போராடியே தீருவார்கள்"

என்ருள் அந்த வீரமங்கை — திருமதி ஆஸாத்—விடுதலை ஆர்வமும் வைராக்கியமும் நிறைந்த குரலில்!

நண்பா, தாயக விடுதலைக்காக துணிந்து தம் குடும்பத்தையே களம் காணவும் காவுகொடுத்திடவும் தயாரான இவர்கள் யார் என்பதனை அறிந்திட உன்உள்ளம் துடித்திடும்; இவர்கள் பாலஸ்தீனத்தின் விடுதலைக்குப் போராடும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை சேர்ந்தவர்கள்; தாய்த்திருநாட்டு மண்ணையே காணுமல், அகதிமுகாம்களில் பிறந்து வளர்ந்து இன்று தம் தாயகத்தின் விடுதலையை மீட்டிட பாலஸ்தீன மக்களின் மாபெரும் தலைவர் யாஸீர் அரபத்தின் தலைமையில் இந்த அயூப் குடும்பம்போல, பல ஆயிரக்கணக்கானேர் தம்மை அர்ப்பணித்து போராடிவருகின்றனர்.

திருமணமே செய்து கொள்ளாமல்—தனது முழுவாழ்வையுமே தாயகத்துக்காக அர்ப்பணித்து—இரு முறை கொலை முயற்சியிலிருந்து தப்பி—குடி, சிகரெட் புகைத்தல் போன்ற கெட்ட நடத்தைகள் துளியுமின்றி—தனது சிந்தனை, சொல், செயல் அனைத்தையும் பாலஸ்தீனத்தின் மீட்சிக்காகவே தந்து அந்தரங்க சுத்தியுடன் பாலஸ்தீனமக்களை வழிநடத்தி வரும் 46 வயது நிரம்பிய யாசிர் அரபாத்தின் சீரிய தலைமையில் விடுதலைக்களத்தில் தியாகத் தீயில் பெருமையுடன் தம்மை இணைத்துக் கொண்டு போராடி வருகின்றனர் பல்லாயிரம் விடுதலை வீரர்கள்!

நண்பா, தாயக விடுதலைக்குப் போராடத் துடித்துக் கொண்டிருக்கும் இந்த அயூப் குடும்பத்தைப்பற்றி அண்மையில் 'நியூஸ் வீக்' சஞ்சிகையில் வெளியிடப்பட்டிருந்த குறிப்பு என் நெஞ்சை நெக்குருக வைத்திட்டதனலேதான், அதை உன்னேடும் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்று இங்கு எழுதிட முற்பட்டேன்.

பாலஸ்தீன விடுதலை வீரர்கள் வெறும் பேச்சில் மட்டுமல்ல — செயலிலும் தம்மை தமது இலட்சியத்துக்காக அர்ப்பணித்து வருகிருர்கள் என்பதை பல சந்தர்ப்பங்களில் உலகம் அறிந்து கொண்டிருக்கிறது; லெபனனில் இஸ்ரேலிய ஊடுருவலுக்கு காரணமாக அமைந்த சம்பவமும் இதையே எடுத்துக் கூறுகிறது.

நண்பா, இஸ்ரேலுக்குள் நுழைந்து பாலஸ்தீனிய விடுதலை வீரர்கள் யூதர்களைகொன்று குவித்தது சரியா பிழையா என்பதுபற்றியல்ல நான் இங்கு குறிப்பிடுவது—ஆனல் பாலஸ்தீன விடுதலை வீரர்களின் தியாகத்தையும், துணிச்சலையும், தமது இலட்சியத்தை வென்றெடுப்பதற்கு அவர்கள் கொடுக்கும் பலிகளையும் எண்ணிடும்போது உண்மையிலே மெய்சிலிர்த்திடுகிறது, இளைஞர்கள் மட்டுமல்ல—இளம் பெண்களும் தங்கள் உயிரையும் அர்ப்பணித்து தாயக விடுதலைக்கு போராடிவருவதைக் காணும்போது விடுதலை நெஞ்சங்கள் அனைத்தும் எழுச்சி பெறுகின்றன.

அண்மையில் பாலஸ்தீனிய தற்கொலைப் படைக்குத் தலைமை தாங்கி இஸ்ரேலுக்குள் நுழைந்து—சாகசச்செயல் புரிந்து—40 யூதர்களைக் கொன்று தன்னையும் அழித்துக்கொண்டவள்—25 வயதே நிரம்பிய அழகிய இளங்கன்னியொருத்தி—அவள் பெயர் தலால் முக்ராபி—என்பதை அறிந்திடும் போது—தன்னையே தன் தாய் நாட்டுக்காக அர்ப்பணித்திடத் துணிந்த அந்த வீராங்கனையின் நெஞ்சுறுதி நம் நெஞ்சைக் குலுங்கிட வைக்கிறது. "தனது கையில் இருந்த கடைசி இரண்டு கைக்குண்டுகளையும் வீசிய தியாகி" என்று அந்த வீரப்பெண்ணைப் பற்றி பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் இராணுவப்பிரிவு பாராட்டியுள்ளது.

இஸ்ரேலுக்குள் புகுந்து யூதர்களை கொன்று குவித்த செயல் சரியானது என்றே தவருனதென்றே நான் இங்குகூற முற்படவில்லை; அல்லது அந்த முறையையும் வழியையும் நான் ஏற்றுக்கொண்டதாகவும் யாரும் கருதிடத்தேவையில்லை; நான் சுட்டிக்காட்டுவதெல்லாம்—நான் போற்றுவதெல்லாம்—சரியாகவோ, தவருகவோ, தன் தாயகத்தின் அடிமை நிலை துடைத்திட, அதன் விடுதலையைக்கண்டிட—அந்தப் புனிதமான இலட்சியத்துக்காக—ஒரு இளம் பெண் தன்உயிரையே அர்ப்பணித்திடத் துணிந்தாளே — அந்த வைராக்கியத்தையும் தியாக உணர்வையுமே நான் போற்றுகிறேன்.

இந்த வைராக்கியமும் உறுதியும் தியாக உணர்வுமே விடுதலையை நாடும் ஓர் இனத்துக்கு—ஓர் நாட்டுக்கு — அடிப்படையானது — அத்தியாவசியமானது; போராட்டமுறைகள், வழிகள், வகைகள் நாட்டுக்குநாடு மாறுபடலாம்; ஆனல் அடிப்படையில் தியாகம், உறுதி, அந்தரங்கசுத்தி, விடுதலைக்காக தன்னையே பரித்தியாகம் செய்யும் வைராக்கியம்—இவை யிருக்குமானல், எந்த ஒரு விடுதலை இயக்கமும் உலகில் தோல்வியடைந்திட முடியாது!

பாலஸ்தீனர்கள் தங்கள் தாயகத்தை என்ருே ஒரு நாள் மீட்டெடுப்போம் என்ற உறுதியுடன் செயற்படுகிருர்கள்; இந்த இலட்சியத்துக்கு வரும் தடைகள், குறுக்கீடுகள் அனைத்தையும் அவர்கள் தேசத்துரோகமாகக் கருதுகிருர்கள்!

நண்பா, இது பாலஸ்தீனியர்களின் நிலை; இங்கு நம்முடைய தமிழ் ஈழத்தினுடைய நிலைமை இன்று என்ன என்பதையும் நாம் சற்று சீர் தூக்கிப்பார்த்திட வேண்டும்! வேகமாக, விரைவாக உணர்ச்சியின் உச்சக்கட்டத்தில் சென்றுகொண்டிருந்த தமிழ் ஈழத்தினுடைய விடுதலைப் போராட்டம் இன்று சற்று மந்த கதியடைந்ததுபோன்ற நிலைமை தோன்றிடக்காரணம் என்ன?

1975ம் ஆண்டு காங்கேசன்துறை இடைத்தேர்தலின்போது தந்தைசெல்வாவின் சிந்தனையில் உருவாகி, ஏராளமான தமிழ் இளைஞர்களின் இரத்தத்திலும், வியர்வையிலும், கண்ணீரிலும் வளர்ந்து, 1976 வட்டுக்கோட்டை மாநாட்டில் தீர்மான வடிவம் பெற்று, 1977 பொதுத்தேர்தலில் தமிழ் தேசிய இனத்தின் ஒப்புதலைப்பெற்ற 'தமிழ் ஈழம்' கோரிக்கை—இழந்த நம் அரசுரிமையை மீட்கின்ற புனிதப் பணி—தேர்தலின் பின்னர் வேகம் குன்றி, ஸ்தம்பித நிலையை அடைந்து கிடப்பதேன்? சிங்கள நாட்டில் 1977 பொதுத்தேர்தலின் போது பயங்கரமாக வீசிய ஐக்கிய தேசியக் கட்சிக்காற்று, தமிழ்ஈழத்தை திசை மாற்றி விட்டதா? என்கிற கேள்விகள் பலரது நெஞ்சை—இலட்சியவாதிகளின் நெஞ்சை—அரித்துக்கொண்டிருக்கின்றன — அறுத்துக் கொண்டிருக்கின்றன—என்பதை நான் அறிவேன்!

தாயக விடுதலைக்காக நாம் ஆற்றிடவேண்டிய பாரிய பணிகளில் ஒன்று வெளிநாடுகளுக்கு நமது வழக்கை எடுத்துரைத்து, அவர்களின் நம்பிக்கையை, ஆதரவை நம்பால் திரட்டுவது; அந்த முயற்சியொன்றே—எதிர்க்கட்சித்தலைமைப்பதவி தந்திட்ட வாய்ப்பினுல் இன்று விடுதலைப் பணி என்ற அளவில் நடைபெறுகிறதேயன்றி — விடுதலைக்கான ஏனைய பணிகள் ஸ்தம்பிதநிலையில் இருப்பதேன்? இவற்றுக்கு நமது இயக்கம் சரியான பதிலைக் கண்டிட வேண்டும்!

சிங்கள நாட்டு அரசு, தனது அரசியல் திட்டத்தில் ஏதாவது சில சலுகைகளை கொடுக்கலாம்; அல்லது கொடுக்காமல் விடலாம்; அல்லது இதோவருகிறது அதோவருகிறது என்று ஆட்சிக்காலம் முடிகிறவரை—இழுத்தடித்துக்கொண்டே போகலாம்; அந்தச் சலுகைகள் என்று வரும்,என்று வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டே தனது செயல்திட்டங்களை உருவாக்காமல் ஒரு விடுதலை இயக்கம் காலத்தைச் கடத்திடவேண்டுமா?

நாம் திட்டவட்டமாக கூறி விட்டோம், சிங்கள அரசாங்கத்தின் எந்தச் சலுகைகளும்; எந்த அரசியல் சட்ட திருத்தமும் நம்மைத் திருப்திப்படுத்தாது; தமிழ்ஈழ அரசுரிமையை மீளப்பெறுவது ஒன்றே நம்மைதிருப்திப்படுத்தும்—நமது சுதந்திரத்தை நாம் மீளப்பெற வேண்டும்; அதுவே நமது ஒரே லட்சியம்—மாற்ற முடியாத முடிவு—என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டோம்—இதன்பின்னும், சிங்கள அரசாங்கத்தின் அற்ப சலுகைகளை எதிர்பார்த்து நாம காத்திருக்கத்தான் வேண்டுமா? இது ஓர் விடுதலை இயக்கத்துக்கு தேவைதானு? சிங்கள நாடு வேறு—தமிழ் ஈழம் வேறு என்ற அடிப்படைக் கொள்கையிலிருந்து நாம் விலகிச் செல்கிறேமா?

இனக்கலவரம் ஏற்பட்டதும், அதனல் நம்மவர் நெஞ்சு குலுங்கும் கொடுமைகளைச் சந்தித்ததும் உண்மை! அப்படியானல் அந்த இனக்கலவரத்தைக்கண்டு நாம் பின்வாங்கி நம் இலட்சியத்தின் வேகத்தை தணித்துவிட்டோமா? அப்படித் தணிப்போமானல் அது இனக்கலவரத்தை எந்த நோக்குடன் சிங்கள வெறியர்கள் நடத்தி முடித்தார்களோ—அந்த நோக்கத்துக்கன்ருே வெற்றி கிட்டியதாகிவிடும்; அதாவது—தமிழனைப்பயமுறுத்தி, அடித்துக்கொன்று அடக்கி ஆளமுடியும் என்ற வெறி உணர்வன்ருே சிங்கள ஆதிக்க வெறியர்களின் உள்ளங்களில் நின்று நிலைத்துவிடும்?

இவ்வாறு பல சிந்தனைகள்—பல கேள்விகள் இளைய நெஞ்சங்களில் இன்று எழுந்தபடி உள்ளன. இவற்றுக்கு நாம்—நமது இயக்கம் விரைவில் விடைகாணவேண்டும்!

உன் அன்புத்தோழன்

கோவை-மகேசன்

## இலவசம்

பங்குனி உத்தர தினத்தன்று சமய தீட்சைவைக்கின்ற மன்றங்கள், சபைகள் தீட்சைக்குரிய சைவ அனுட்டான விதி என்னும் நூலை யாழ்ப்பாணம் 'மில்க்வைற்' தாபனத்தாரிடமிருந்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம் என்பதை அறியத்தருகின்ருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## தேவநாயகத்துக்கு ஒரு வார்த்தை!

இப்போது நீதியமைச்சர் பதவியை அலங்கரிக்கும் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் அவர்கள், முன்பு தமிழர் கூட்டணியுடன் தொடர்பு கொண்டிருந்தவர்; தமிழர் கூட்டணியின் நடவடிக்கைகளில் பங்கேற்றவர்; தமிழர் கூட்டணி பொதுமேடைகளிலும், தேசிய அரசுப் பேரவையிலும் கூட்டணியின் இலட்சியங்களை ஆதரித்துக் குரல்கொடுத்தவர்; கூட்டணியுடன் கொண்டிருந்த இந்த நெருங்கிய தொடர்பினுல், தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளையும் அபிலாஷைகளையும் தெரிந்துகொள்ளும் வாய்ப்பை பெற்றிருந்தவர்.

திரு. தேவநாயகம் அமைச்சர் பதவியை ஏற்றபின்னர் கூட தேசிய அரசுப்பேரவையில் ஒருதடவை பேசுகையில், "எதிர்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம் ஒரு பாதையால் மட்டக்களப்புக்கு போகின்ருர்; நான் வேருர் பாதையால் மட்டக்களப்புக்கு செல்கின்றேன்; இருவரது பாதைகளும் வேறு வேருக இருந்தாலும் இறுதியில் போய்ச் சேரும் இடம் ஒன்றுதான்; அதே போல அரசியலில் நாம் வெவ்வேறு பாதைகளில் போனுலும், தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதே நம் இருவரதும் ஒரே நோக்கம்—அடிப்படை நோக்கம்" என்ற சாரப்பட எடுத்துரைத்திருந்தார். அதாவது—ஆளுங்கட்சியில் இருந்தாலும், அமைச்சராக இருந்தாலும், தமிழினத்தின் நலனைப் பேணுவதிலேயே தாம் கண்ணும் கருத்துமாக இருப்பதாக திரு. தேவநாயகம் பூடகமாக அறிவித்திருந்தார்.

திரு. தேவநாயகத்துக்கும் நமக்கும் அரசியல்பாதையில் முரண்பாடுகள் இருந்தபோதிலும்-குமாரசூரியரைப் போல ஆமாம் சாமி' என்று தலையாட்டும் பொம்மை அமைச்சராக விளங்காமல் தமிழன் என்ற இன உணர்வுடன் திரு. தேவநாயகம் செயல்படுவார் என்ற நம்பிக்கையை திரு. தேவநாயகம் அவர்களின் மேற்கண்ட உறுதிமொழி யூட்டியது; நாம் மகிழ்ச்சியடைந்தோம்.

ஆனுல் அண்மையில் சில நாட்களாக, திரு. தேவநாயகம் அவர்களின் பெயரால் நாளேடுகளில் அடிக்கடி வெளிவரும் பேட்டிகளையும், அறிக்கைகளையும் படிக்கும்போது, தமிழ்மக்களின் உண்மையான பிரச்சினையை, அடிப்படையான பிரச்சினையை ஆழமாக நோக்காமல்—அதை வெறும் மேலோட்டமாக—சாதாரண 'மொழிப்பிரச்சினை' என்ற அளவிலேயே திரு. தேவநாயகம் அவர்கள் தவருக எடைபோடுகிருரோ என்று ஐயுறவேண்டியுள்ளது.

ஆம், அரசியலமைப்பில் தமிழுக்கு சில சலுகைகளை அளித்துவிடுவதன் மூலமோ, தமிழை தேசியமொழிகளில் ஒன்ருக அரசியல்சட்டத்தில் இடம் பெறச் செய்துவிடுவதன் மூலமோ தமிழினத்தின் பிரச்சினையை தீர்த்துவிட முடியும்; தமிழ் மக்களின் அபிலாஷைகளை முழுமையாக ஈடுசெய்துவிட முடியும்; என்று திரு. தேவநாயகம் அவர்கள் கருதுவதுபோல தோன்றுகிறது.

தமிழ்மக்கள் இன்று எதிர்நோக்குவது மொழிப்பிரச்சினையேயல்ல; இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மொழிப்பிரச்சினையிருந்தது உண்மைதான்; ஆனுல் இன்று இருப்பதோ இனப்பிரச்சினை; தமிழினம், தமிழினமாக தொடர்ந்து வாழ்வது எப்படி என்ற பிரச்சினை; தமது தாயகத்தை—தமது நிலத்தை தமிழ்பேசும் மக்கள் பாதுகாத்துக்கொள்வது எப்படியென்ற பிரச்சினை; ஆளப்படும் இனம் என்ற நிலையிலிருந்து தமிழ்மக்கள் எப்படி மீட்சிபெறுவது என்ற பிரச்சினை; இவையே தமிழ்மக்கள் இன்று சந்திக்கவேண்டிய—தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினையாகும்!

எனவே 'மொழிப்பிரச்சினை' என்ற குறுகிய வட்டத்துக்குள் நின்று தமிழர் பிரச்சினையை நோக்குவதும், தமிழுக்கு சில சலுகைகளை அரசியல் சட்டத்தில் இடம் பெறச் செய்வதன் மூலம் தமிழர் பிரச்சினையை தீர்த்துவிடலாம் என்று கருதுவதும் தம்மைத்தாமே ஏமாற்றிக்கொள்வதாகவே முடியும்!

மொழியைவிட அதிமுக்கியமானது தமிழினத்தின் வாழ்விடப்பிரச்சினை; மொழிவாழ, இனம்வாழ, அதற்கென்ருேர் தாயகம்—வாழ்விடம் வேண்டும்; அந்த வாழ்விடம், மாற்ருரால் ஆக்கிரமிக்கப்படாமல், சுரண்டப்படாமல் பாதுகாக்கப்படவேண்டும்; மொழியும், இனமும், ஆகாயத்தில் வாழமுடியாது; தனது தாயகத்தில்தான் நின்று நிலைத்து செழித்துவர முடியும். எனவேதான் தமிழ்பேசும்மக்களின் மரபு வழித்தாயகத்தை—நிலத்தை பாதுகாப்பதுதான்—பாதுகாப்புத்தேடவேண்டியதுதான் நமக்கு முன்னுள்ள அதிமுக்கிய பிரச்சினையாகும். திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத்தினின்றும், சட்டவிரோத சிங்களக் குடியேற்றத்தினின்றும் தமிழ் தாயகம்—தமிழ் மண் காப்பாற்றப்படவேண்டும்.

எனவே அமைச்சர் திரு: தேவநாயகம் அவர்கள்—மொழிப்பிரச்சினைபோன்ற நோயின் வெளிப்பாடுகளுக்கு வைத்தியம் செய்ய முனையாமல்—தமிழினத்தின் உண்மையான அடிப்படை நோய் தீர வைத்தியம் செய்ய முன்வருவாரானுல்—நிமிர்ந்து நின்று தமிழ் மண்காக்க தமது அரசுடன் போராடுவாரானுல்—அவரது கையைப் பலப்படுத்திட நாம் எப்போதும் தயாராக உள்ளோம்.


# சிங்களவரால் இருட்டடிப்பு செய்யப்படும் ராமநாதன் வரலாறு

## வைத்திலிங்கத்தின் கைவண்ணத்தில் ஒளிவீசி வெளியாகிறது!

இந்த நாடு பெற்றெடுத்த ஈடிணையற்ற பெருந்தலைவர்கள் சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர் பொன்னம்பலம் அருணுசலம் ஆகியோர் என்பதை எவராலும் மறுக்கவோ மறக்கவோ முடியாது. இந்த இருபெருந் தலைவர்களும் வாழ்ந்திட்ட காலம் இலங்கையின் சரித்திரத்தில் என்றுமே மறக்க முடியாத பல திருப்பங்களையும் நிகழ்ச்சிகளையும் உள்ளடக்கிய காலம் என்பதை வரலாற்ருசிரியர்கள் அனைவருமே ஒப்புக்கொள்வர்.

அந்நிய ஏகாதிபத்தியம் இலங்கையிலுள்ள இரு தேசிய இனங்களின் அரசுகளையும்கைப்பற்றி, அவற்றை ஒன்றிணைத்து ஒரே அரசை ஸ்தாபித்த 1833ம் ஆண்டின் பின்னர், இலங்கையில் விழிப்புணர்வுக்கும், சுதந்திர உணர்வுக்கும் முதன் முதலில் வித்திட்ட பெருமகன் சேர் பொன். இராமநாதன் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர்!

சேர் பொன்: இராமநாதனின் வரலாறு, இலங்கையின் இருதேசிய இனங்களின் போக்குகளையும் நோக்குகளையும் அபிலாஷைகளையும் ஆர்வங்களையும் எடுத்துக்காட்டும் ஒரு பெரும் பொக்கிஷம், பாரபட்சமின்றி அனைவரும் சகோதரர் என்ற நிலையில், தேசிய உணர்வற்றுக் கிடந்த சிங்களவர்களுக்கு தேசிய உணர்வையூட்டி, அவர்களது உரிமைகளுக்காக சீமை வரை சென்று வாதாடிய பெரியார் இராமநாதன்.



நூலாசிரியர் திரு. எம். வைத்திலிங்கம் பீ. ஏ.

தம்முடைய இறுதிக் கால கட்டத்தில் வளர்த்தகடா மார்பில் பாய்வதை அறிந்து துடித்தெழுந்தவர். டொனமோர் அரசியலமைப்பை எதிர்த்து தள்ளாத வயதிலும் போர்க்குரல் கொடுத்தவர் எந்தச்சிங்கள இனம் ஒரு காலத்தில் சேர் இராமநாதனை உச்சந்தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடியதோ அதே சிங்கள இனம், இராமநாதன் தனது சொந்த இனத்துக்கு—தமிழினத்துக்கு—பாதுகாப்புதேட முயன்ற போது அவருக்கு வகுப்புவாதியென்று முத்திரை குத்தத் தலைப்பட்டனர்.

சேர் அருணுசலமோ சிங்களவரை அளவுக்கதிகமாக நம்பி முடிவில் ஏமாற்றப்பட்டு, மனம் நொந்து 1924ம் ஆண்டிலேயே 'தமிழ் ஈழம்' அமைக்க வேண்டுமென்று இனவிடுதலை முழக்கமிட்டவர்;

இந்த இருபெரும் தலைவர்களின் வரலாறு தமிழ்இனத்தின் இன்றைய விடுதலைப் போராட்டத்துக்கு அடிக்கல்லாக அத்திவாரமாக அமைகிறது. பெரியார் இராமநாதனும், அருணுசலமும் தமது இறுதிக் காலத்தில் கொண்டிருந்த கொள்கைகளையும், ஆற்றிய பணிகளையும் மூடி மறைத்து விட்டு—தன்மொழியையும் சமுதாயத்தையும் அறவே மறந்த "தேசியத் தலைவர்களாக" இந்த இரு தலைவர்களையும் வெளியுலகுக்கு காட்டவும், இத்தலைவர்களது பிற்காலக் கருத்துக்களை இருட்டடிப்பு செய்யவும் திட்டமிட்ட சதியொன்று சிங்கவவர்களால் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

—5-ம் பக்கம் பார்க்க

### கரைநகர் கிழக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி ஆண்டுக் கூட்டம்

காரைநகர் கிழக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி ஆண்டுப் பொதுக்கூட்டம் 25-3-78ம் திகதி சனிக்கிழமை பி. ப. 5.00 மணிக்கு திக்கரை கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெறும். கூட்டத்திற்கு கிளைத்தலைவர் திரு. மு. பாலசிங்கம் தலைமை வகிப்பார். சந்தா செலுத்திய உறுப்பினர்கள் மட்டும் கூட்டத்திற்கு அனுமதிக்கப்படுவர்.

வட்டுக்கோட்டை தேசிய அரச பேரவை உறுப்பினர் திரு. த. திருநாவுக்கரசு சிறப்புரை நிகழ்த்துவார்.

### தமிழர் விடுதலைக் கூட்டணி திருநெல்வேலிக் கிளை அங்குரார்பணம்

மேற்படி கூட்டம் 18-3-78 மாலை நல்லூர் பா. உ. திரு. மு. சிவசிதம்பரத்தின் இல்லத்தில் நடைபெற்றது கீழ் காணுவோர் கிளை நிர்வாகிகளாகத்தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர். திரு. அ. செல்லத்துரை, உபதலைவர்கள். திரு. சி. கந்தையா, திரு. வ. கிருஷ்ணன், செயலாளர். திரு. செ. இராசு, துணைச் செயலாளர். திரு. த. துரைமணி, பொருளாளர்; திரு. செ. சிவலிங்கம், 9 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

### திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்

நிகழும் பிங்கள வருடம் பங்குனித் திங்கள் 14ஆம் நாள் (27-3-78) திங்கட்கிழமை பகல் 11-26 மணிக்கும் 1-02 மணிக்கும் இடையில் வரும் மிதுன லக்கின சுப முகூர்த்தத்தில்!

| | |
|---|---|
| இடைக்காடு<br>ஆ. கந்தையா தம்பதிகளின்<br>மகன்<br>பாலகிருஷ்ணனுக்கும் | தெல்லிப்பழை<br>க. சுப்பிரமணியம்<br>தம்பதிகளின் மகள்<br>சாரதாதேவிக்கும் |

மணமகன் இல்லத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்தில் கலந்து மணமக்களை வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்ருேம்.

இங்ஙனம்
தங்கள் நல் வரவை நாடும்
க. சுப்பிரமணியம்
(ஆனந்தா கோர்ப்பரேசன், பம்பலப்பிட்டி
பொருளாளர், தமிழர் விடுதலை கூட்டணி
கொழும்பு கிளை)

வைரவ கோவிலடி,
தெல்லிப்பழை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுராதபுரத்தில் யூ. என். பி. அமைப்பாளர் தலைமையில் நடந்த காடைத்தனம்!

## தார்மீகவாதிகளின் சுய உருவம் தெரிகிறது!

1977 ஆகஸ்ட் இனக்கலவரத்தின்போது, தார்மீகம் பேசும் ஜே, ஆரின் சீடர்கள், ஆங்காங்கே தமிழர்களைத்தாக்கிய சம்பவங்கள் குறித்து சன்சோனி ஆணைக்குழு முன் இப்போது சாட்சியங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அனுராதபுரம் வடக்கு ஐக்கியதேசியக்கட்சி பா. உ. திரு. பண்டாரவின் அந்தரங்கக்காரியதரிசியும், அப்பகுதி ஐ. தே. க. அமைப்பாளருமாகிய பத்திரான என்பவர் முன்னிலையில் சிங்களக் குண்டர்கள் தமிழர்களை கொடூரமாகதாக்கிய சம்பவமொன்றை அனுராதபுரத்தில் பாதிப்புக்குள்ளானவர்களில் ஒருவரான இராசப்பா சுவேந்திரராசா சன்சோனி ஆணைக்குழு முன் விடரித்துள்ளார்.

ஏற்கெனவே சாட்சியமளித்தவர்களில் இருவர் இனக்கலவரத்தின்போது ஐக்கிய தேசியக்கட்சியினர் அதில் பங்குபற்றியது தமது சாட்சியங்களில் குறிப்பிட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

(1) தமது வீட்டைத் தாக்கிகொள்ளையடித்த கொள்ளைக் கூட்டத்துக்கு ஐக்கிய தேசியக்கட்சியின் போயகம வாலிப முன்னணித்தலைவர் ஜெயசிங்கா என்பவரே தலைமைதாங்கியதாக பேராதனைப் பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. நரேந்திரன் தமது சாட்சியத்தில் குறிப்பிட்டிருந்தார்.

(2) 1977 ஆகஸ்ட் 16ம் திகதி தாம்பயணம் செய்தயாழ் — கொழும்பு ரயிலை வழிமறித்து அனுராதபுரத்தில் தமிழர்களைத் தாக்கி கொள்ளையடித்தவர்கள், கொள்ளைமுடிந்து போகும்போது ஐக்கியதேசியக்கட்சிக்கு ஜே போட்டுச்சென்றதாகவும் குண்டர்கள், வவுனியா யூ. என். பி. வேட்பாளர் திரு. புலேந்திரனை அடையாளம் கண்டு அவருக்கு மட்டும் பாதுகாப்பு கொடுத்ததாகவும், சட்டத்தரணி திரு. எஸ். சி. சந்திரகாசன் ஆணைக்குழுமுன் சாட்சியமளித்திருந்தார்.

20-3-78ல் சாட்சியமளித்த அனுராதபுர வர்த்தகர் திரு. சுவேந்திரராசா தமது சாட்சியத்தில் கூறியிருப்பதாவது:-

"சிங்களச் சனக்கூட்டம் எங்கள் வீட்டைக் கொள்ளையடித்தது. இதை நாங்கள் ஒரு பற்றைக்குள் ஒழித்திருந்துபார்த்தோம். அப்படிச் கொள்ளையடித்தவர்களில் மூவரை நான் அடையாளம் காட்டுவேன். எமது வீட்டுக்கு முன்புறமிருந்த கடையை குண்டர்கள் அடித்து உதைத்து சேதப்படுத்தியது மட்டுமன்றி, கடையின் முன்னால் நின்ற ஆடுகளைப் பிடித்து மரங்களில் அடித்துக்கொன்றனர். கோழிகளையும் அவ்வாறே செய்தனர், அங்குநின்ற தமிழர்களையும் தாக்கினர்.

அகதிகளாக தஞ்சம் புகுந்த எங்களை பொலீஸ்கான்ஸ்டபிள் அழகப்பெருமா அனுராதபுரம் கச்சேரிக்குவானில் அழைத்துச்சென்றார். அந்த வானில் 23பேர் இருந்தோம். சிவில் உடையில் பொலிசார் ஒருவரும் எங்களுடன் வந்தார், அனுராதபுரம்-யாழ்ப்பாணம் சந்தியில் சிங்களச் சனக்கூட்டம் ஒன்று வானைத் தடுத்தது. வான் நிறுத்தப்படாமல் ஓடியபோது அதன் ஜன்னல்கண்ணாடி இரும்புத்தடியால் அடித்துநொறுக்கப்பட்டது.

'சனக்கூட்டம், வான்ஓட்டியையும் உதவியாளரையும் வெளியே இழுத்துத்தாக்கியது. எனது சகோதரியின் மூன்றுமாதக் குழந்தையின் தலையிலும்காயம் ஏற்படுத்தியது. அவ்வாறு வன்செயலில் ஈடுபட்ட குண்டர்கள் மத்தியில் அனுராதபுரம் வடக்கு ஐ. தே. க. பா. உ. திரு. பண்டாரவின் அந்தரங்க செயலாளரும், அப்பகுதி ஐ. தே. க. அமைப்பாளருமான திரு. பத்திரானவும் காணப்பட்டார். அவர் கான்ஸ்டபிள் அழகப்பெருமாவை நோக்கி "தமிழனை காப்பாற்றப்போகிருயா?" என்று கேட்டார். அதற்கு அழகப்பெருமா, "எனது வேலை எனக்குத் தெரியும்— நீ போ" என்று பதிலளித்தார். இதுபற்றி திரு. அழகப்பெருமா தம்மை வழியில் சந்தித்த சார்ஜண்ட் ஒருவரிடமும் கூறியிருந்தார்."

---

## சிங்களவரால்...

—4-ம்பக்கத் தொடர்

இந்தச் சதிகளை முறியடித்து இராமநாதனும் அருணுசலமும் ஆற்றிய முழுமையான பணிகளை—அவர்களது உள்ளக்கிடக்கையை — தம்முடைய இறுதிக்காலத்தில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள்;விருப்பங்கள் குறித்து அவர்கள் இருவரும் கொண்டிருந்த திட்டவட்டமான முடிவுகளை — தாம் எழுதியுள்ள சேர்பொன்னம்பலம் இராமநாதன் அவர்களைப்பற்றிய வரலாற்று நூலின் இரண்டாவதுதொகுதியில் அழுத்தமாகவும், யாரும் மறுக்க முடியாவகையிலும், மரபு பிறழாமலும், நடுநிலையில்நின்றும், தமக்கேயுரிய ஆங்கிலநடையில் அற்புதமான நூலொன்றை படைத்துள்ளார் முன்னாள் சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் திரு. எம். வைத்திலிங்கம் பீ, ஏ. அவர்கள்.

பெரியார் இராமநாதன் பற்றிய முதலாவது வரலாற்று நூல் ஏற்கெனவே இவ்வாசிரியரால் எழுதப்பெற்று வெளியிடப்பட்டதும் எச். ஏ. ஜே. ஹுலுகல போன்ற அறிஞர்கள் பலர் இந்நூல்பற்றி விதந்துரைத்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. சிங்களத்தலைவர்களில் ஒருவரான காலஞ்சென்ற டட்லி சேனநாயகா, இந்நூலைப்பார்த்துவிட்டு, மெய்மறந்து சிங்களவர்களுக்கிடையே இப்படியொரு வைத்திலிங்கம் இல்லையே என்று வலைப்பட்டிருக்கிறார். அந்த அளவுக்குதிரு.வைத்திலிங்கம் தமிழ் மக்களின் பெருமையை உயர்த்தியிருக்கிறார்.

சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அதிமுக்கிய கட்டங்களை— அவர் நடத்திய அரசியல் போராட்டங்களை — அவர் கொண்டிருந்த தெளிவான சிந்தனைக் கண்ணோட்டங்களைக் கொண்டு ஆசிரியர் வைத்திலிங்கத்தின் இரண்டாவது தொகுப்புவெளிவருகிறது. 1910 முதல் 1930 வரை — இராமநாதனும், அருணுசலமும் ஆற்றியபணிகளை இந்த இரண்டாவது தொகுப்பு உள்ளடக்கியுள்ளது. 758 பக்கங்களில் வெளிவரும் இந்த ஈடிணையற்ற நூலின் வெளியீட்டு விழா, முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. சன்சோனி தலைமையில் 2-4-78 ஞாயிற்றுக் கிழமை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது.

---



## நண்பர்கள் தேவையா

அனைத்துலக கலாசார நட்புறவு விபரங்களுக்கு தபாற்செலவுடன் விண்ணப்பியுங்கள், "சந்திரோதயம்," சர்வதேச பேனு நண்பர்கள் தலைவர், 265/8, சேர்ப்பன்டைன்பாதை, பொரளை. கொழும்பு—8.

---

## கத்திக்குத்து—

—1-ம் பக்கத் தொடர்

வில் நடந்த அசம்பாவிதம் ஒன்றில் ஐந்து சிங்கள இளைஞர்கள் சேர்ந்து ஒரு தமிழ் இளைஞனை கத்தியால் குத்திப் படுகாயப்படுத்தியதன் பொருட்டு அந்த ஐவரும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும், கத்திக்குத்துக்கு இலக்கான தமிழ் இளைஞர் உயிருக்கு ஆபத்தான நிலையில்'பெஜ்ட்டாட்' (Beghdad) மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் அறியவருகிறது. இச்சம்பவம், தமிழர்கள்சிங்களவருடன் இந்த நாட்டில் மட்டுமல்ல எந்த நாட்டிலும் இணைந்து வாழ முடியாது என்பதையே வலியுறுத்தும் வண்ணம் அமைந்துள்ளது.

---

## வென்றிடும் நாள் விரைந்து வரும்



கொன்றெழித்தால் அவன்போடும்
கொட்டம் அடங்கி விடும்
நின்று நிலை நாம் பெறுவோம்
நீடிக்கும் நமதரசு
என்று எண்ணி ஏசுவினை
அன்றறைந்தார் சிலுவையிலே
ஆக்கினைகள் பல புரிந்தார்
வென்றாரா இல்லை இல்லை
வெட்கித்தலை குனிந்தார்—பதிலாக
வென்று வந்தார் யேசுபரன்
வீணரையும் சாவினையும்
இன்றெமது ஈழத்தில்
இன்னலுற்று அழிந்துமனம்
குன்றுகின்ற தமிழினத்தார்
குருசிலறை படுகின்றார்
என்றுமிது நிலைக்காது
எப்படியோ நாள்மாறும்
சென்று விடும் எம் துயர்கள்
செயமுரசு விண்ணதிர
வென்றிடுநாள் விரைந்துவரும்
விடிவு நாளதுவாகும்
அன்றுயிர்த்த ஞாயிறுதான்
அனைத்துலகத் தமிழருக்கும்

—நாவண்ணன்

---

மில்க்வைற் தயாரிப்புகளுக்கு நீங்கள் கொடுக்கும் ஆதரவு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு கொடுக்கும் ஆதரவாகும்

மில்க்வைற்_யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழ்பண்பாட்டு மாநாட்டு பேராளர்களை

# சுண்டியிழுத்தது ஈழத்தமிழர் பிரச்சினையே!

## பேராசிரியர் சுந்தரவடிவேலு குமுறினார்;

## குமரி அனந்தன் கொதித்தெழுந்தார்!

## இராஜமனோகரன் கட்டுரைபற்றி தமிழகத்திலிருந்து ஒரு கடிதம்!

**பரிமளா மணாளன்**
(கோவை — தமிழ்நாடு)

உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்க மாநாடு ஒரு கண்ணோட்டம்—நண்பர் இராசமனோகரன் கட்டுரை கண்டேன். அதையொட்டி சிலவற்றைச் சொல்ல இதை எழுதுகிறேன்.

"அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கம் அளித்த வரவேற்பில் நடந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்ட நண்பர் அங்கு ஈழத்தமிழர் பிரச்சினைக்கு ஆதரவு கேட்டபோது கிடைத்த விடை "மலேசியத் தமிழருடையது பொருளாதாரப் பிரச்சினை; ஆனால் உங்களுடையதோ அரசியல் பிரச்சினை அங்கு கைவைத்தால் அது எம்மை பாதிக்கும்" என்று அப்படியே குறிப்பிட்டிருக்கிறார்.

'நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே' என்று குரலெழுப்பி தவறுகளை அஞ்சாது நின்று சுட்டிக்காட்டிய நக்கீரனும் கலிங்கத்துப் பரணி பாடிய செயங்கொண்டாரும், 'கைவேல்களிற்றொடு போக்கி வருபவன் மெய்வேல் பறியா நகும்' என்று வீரத்திற்கு இலக்கணம் வகுத்த வள்ளுவனும், புறநானூற்றுக்குச் சொந்தமான புலவர்களும்; ஏன் கோவை மகேசனும் வந்தபரம்பரையைச்சார்ந்தவர்களாக தமிழக எழுத்தாளர்கள் இருப்பார்கள் என்று எண்ணி அவர் வந்தார் போலும். ஆனால் இவர்களது 'வீரத்தை'க்கண்டு முதுசெலும்பற்ற எழுத்தாளர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார். அங்கேநண்பர் ஆண்மையற்ற எழுத்தாளர்கள் என்று பொருத்தமான சொல்லைப் போட்டிருக்கலாம். தமிழை விற்றும் தமிழனை சுரண்டிப் பிழைக்கும் இவர்களுக்கும் விபச்சாரிகளுக்கும் வேறுபாடுகள் காண்பது கடினம்.

ஈழத்தில் நடப்பது அரசியல் பிரச்சினை என்று கண்டுபிடித்து சொல்லியிருக்கும் இந்த அறிவாளிகள் தங்களுடைய ஆண்மையற்றதனத்தை மூடி மறைக்க உண்மைகளைத் திசைதிருப்ப வேண்டியதில்லை, எம்மைப் போன்ற மிகச்சாதாரண மானவர்களுக்கும் கூடத் தெரிகிறது ஈழத்தில் நடப்பது ஒரு அப்பட்டமான இன அழிப்பு முயற்சி என்று பெருமைக்குரிய தமிழீழத்திற்கு சொந்தமான என் இனமே இந்த 'நேர்மையான' எழுத்தாளர்களை பத்திரிகையாளர்களை உமது மண்ணில் நுழைய விட்டீர்களானால் தமிழகத்தில் இருந்து உமக்குக்கிடைக்கும் அற்ப சொற்ப ஆதரவும் திசை திருப்பப்படும் என்பதை உணர்ந்து கொள்.

நண்பர் இராசமனோகரன் தமிழகம் வரும் ஈழத்தமிழ் தலைவர்களுக்கு வேண்டுகோளும் விடுத்துள்ளார். யாமும் ஈழத்தமிழக தலைவர்களை வாருங்கள் என்று அழைக்கிறோம். சென்னைக்கு மட்டும் வந்து போக அல்ல. தமிழகமெங்கும் மக்களைச் சந்திக்க, மூடிமறைக்கப்பட்டுள்ள உமது செய்திகளை வெளிச்சம் போட்டுக்காட்ட வருக வருக என்று வரவேற்கிறோம்.

உ. த. ப. இயக்க மாநாட்டில் பேராளர்களை முற்றாகக் கவர்ந்தது ஈழத் தமிழர் பிரச்சினைகளே. 'இத்துணை கொடுமைகளா' என்ற வேதனைகலந்த பேச்சுக்களே எங்கும் எதிரொலித்தன. தங்கக்கடற்கரையில் நடந்த பாட்டரங்கில் ஈழ நண்பர்களின் கவிதைகள் கேட்டு அழாதவர்கள், மனம் கொதிக்காதவர்கள் ஒருவர் கூட இல்லை. சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னை நாள் துணைவேந்தர் நெ. து. சுந்தரவடிவேலனார் மனக்கொதிப்பால் பேசத்தடுமாறினார். பேச்சினூடே அவர் குறிப்பிட்ட சொற்கள் கவனிக்கத்தக்கது. 'இந்த மூன்று இளங்கவிஞர்களால் 65 வயதைத் தாண்டிய கிழவனுக்கே இந்த துடிப்பு வந்தது அன்றைக்கு இந்தப்பாட்டைக் கேட்டிருந்தால் என்ன செய்திருப்பேனோ தெரியாது என்று ஆவேசமாகக் குறிப்பிட்டார்.

இதேபோன்று ஜனதாக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் குமரி அனந்தன் இலங்கைப் பிரச்சினைபற்றிப் பேசியபோது குறிப்பிட்ட சொற்கள் கவனிக்கத்தக்கது. எத்துணைபேர் இந்த பிரச்சினையிலே எத்துணை பேரைப் புரியவைக்க முயன்றோம்? நம்மில் சிலர் இந்த வட்டத்தில் மட்டும்தான் இந்தப் பேச்சு எடுபடும் என்று நீங்களே ஒரு குறுகிய வட்டம் போட்டுக் கொண்டீர்களென்று சொன்னால் அதற்கு மற்றவர்களும் பொறுப்பாக இருக்கமுடியாது. இன்னும் வட்டத்தைப் பெரிதுபடுத்த வேண்டும்...நான் டெல்லியில் இருக்கிறேன். பாராளுமன்ற உறுப்பினராக இருக்கிறேன். என்னால் எது செய்ய முடியுமோ அது செய்யத் தயாராக இருக்கிறேன்...'' என்றார்.

எனவே ஈழத்து என்னினத்து தலைவர்களே பிரச்சினைகளை தமிழகத்திலும், இந்தியாவிலும், உலகெங்கிலும் எடுத்துச் சொல்லப் புறப்படுங்கள் உலகின்கண் தமிழீழத்தின்மீது எவ்வளவு விரைவில் அதிகபட்சம் விழுகிறதோ அதைப் பொறுத்துத்தான் விடுதலைத் திருநாளும் வேகமாக வரும் என்பது உங்களுக்குத் தெரியாததுமல்ல. எனவே விடுதலை ஆர்வலர்கள் உலகெங்கும் 'புனிதப்பயணம்' மேற்கொள்க.

நண்பர் இந்தியாவரும் 'சிலகலாநிதிகள்' பற்றியும் குறிப்பிட்டிருந்தார். தமக்குத் தாமே யதார்த்தவாதிகள், முற்போக்குவாதிகள் என்று முத்திரை குத்திக் கொண்டு அலைகின்ற இவர்களும் இவர்கள் சார்ந்துள்ள

பொதுவுடமை இயக்கத்தினரும் ஒரு தனிரகம். இந்திய இலங்கைப் பொதுவுடமை வாதிகளையே குறிப்பிடுகிறேன். சுயமாகச் சிந்திக்கும் ஆற்றலற்ற இந்தக் கும்பலிலே விரல்விட்டு எண்ணக்கூடிய அளவு எண்ணிக்கையினர் விதிவிலக்காக இருக்கலாம். இவர்கள் ஊர் தோறும் மேடைபோட்டு வியட்நாமில் நடப்பதென்ன? அங்கோலாவில் கியூபாவில் நடப்பதென்ன என்று முழங்குகிறார்கள்; எழுதுகிறார்கள். இலங்கையைப் பற்றி நினையாமல் இந்து சமுத்திரத்தை அமைதிப் பிராந்தியம் ஆக்குவோம் என்கிறார்கள். அங்கு என்ன போர் நடக்கிறது? ஒருவேளை நமது உணர்ச்சிக் கவிஞர் சொன்ன மாதிரி மீன்கள் சமாதானமாக வாழவா? பொதுவுடமை வாதிகள் மாஸ்கோவையே பிரதிபலிக்காமல் உங்களுடைய சுயசிந்தனையையும் கொஞ்சம் உபயோகப்படுத்துங்கள். இலங்கையில் ஒரு தேசிய இனம் அழிக்கப்படுவதை உணருங்கள். ஐம்பது ஆண்டுகாலமாக கட்சி நடத்துகிறீர்கள். ஆனால் இன்னும் இந்நாடுகளில் ஒரு தொகுதியில்கூட தனித்து நின்று உங்களால் வெற்றிபெற முடியவில்லையென்றால் மக்களின் பிரச்சனைகளை உங்களால் அணுகி ஆதரவு பெறமுடியவில்லை என்பது உண்மையாகிறது. உழைக்கும் மக்களுக்குசுரண்டப்படும் இனத்திற்கு குரல் கொடுக்குமளவிற்கு போராடுமளவுக்கு லெனினை ஸ்டாலினை. மாவோவை, மார்க்சை, ஏங்கெல்சை நீங்கள் கற்றுக் கொள்ளவில்லை. மாஸ்கோவில் மழை பெய்தால் உங்களுக்கு சளிபிடிக்கும் நிலை இனியும் வேண்டாம். சுயமாகசிந்தியுங்கள் உங்கள் பார்வை உங்களுக்கு அருகாமையிலே சுற்றியுள்ளவர்கள் மீது விழட்டும். இனியும் பொதுவுடமைக்கு உள்ளிருந்து செயல்படும் துரோகிகளாக. போலி பொதுவுடமை வாதிகளாக இருக்க வேண்டாம்.

சிறிமா—சாஸ்த்திரி ஒப்பந்தம் மூலம் இங்குவந்த தமிழரின் இழிநிலைபற்றியும்குறிப்பிட்டிருக்கிறார் நண்பர். இந்தியாவில் தேனும் பாலும் ஓடுவதாகவும் இங்கு வந்தால் சுகமாகவாழலாம் என்றும் நினைத்துக் கொண்டிருக்கின்ற தமிழர்கள் குறிப்பாக மலையகத் தமிழர்கள் ...

ளது எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள். இலங்கை மண்தான் உமக்குச்சொந்த மானது. கண்ணீரையும், செந்நீரையும், உயிரையும், உடலையும் கொடுத்து உம் முன்னோர்கள் வளமாக்கிய மண் அது. மலைநாட்டையும் தேயிலை, ரப்பர்த் தோட்டங்களையும் உம்முன்னோர்கள் எத்தனை இன்னல்களைத்தாங்கிக் கொண்டு வளப்படுத்தினார்கள். அதைவிட்டு விட்டு இங்கு வந்து பிச்சையெடுக்கும் இழிநிலைக்கு ஆளாக வேண்டாம். சென்னை போன்ற நகரங்களில் விடுதிகளில் உடலைவிற்றுப் பிழைக்கும் வாழ்வு வேண்டாம் தமிழகம் வருவீர்களாயின் இந்தநிலைக்குத்தான் நீங்கள் முற்றிலும்ஆளாகநேரிடும். என்பதை வெட்கத்தோடும் வேதனையோடும் சொல்கிறேன். உங்களை வந்தேறு குடிகள் என்று சொல்கின்ற சிங்களவர்களை அவர்களின் புனித நூலான மகாவம்சம் வந்தேறு குடிகள் என்று சொல்லுகிறது. எனவே இலங்கையில் சிங்களர்களுக்கு எவ்வளவு உரிமை உண்டோ அதற்குஅணுவளவும் குறையாத உரிமைஉமக்கும் உண்டு' இதில் உண்மைக்கு மாறான கற்பனைகள் எதுவும் இல்லை. எனவே உமது உரிமைகள் பறிக்கப்படும்போது போராடி மீட்டுக்கொள்வது அழகு; விட்டுவிடுவது கோழைத்தனம்.

நண்பர் இராசமனோகரன் தமது கட்டுரையில் பண்பாட்டு இயக்கத்தைப் பெற்றெடுத்த திரு. கனகரத்தினத்தைப்பற்றி ஏதும் குறிப்பிடத் தவறிவிட்டார். இயக்கத்தை வலுப்படுத்த வேண்டிய அவசியம் பற்றியும் குறிப்பிடாமல் விட்டிருக்கிறார். தன்நாட்டுக்காரர் தானே என்று நினைத்து தாமே பாராட்டுவதா என்று விட்டிருக்கலாம். வெற்று வார்த்தைகளால் பாராட்டிப் பயனென்ன என்றும் விட்டிருக்கலாம். எப்படியோ இருக்கட்டும். இந்தமாதிரி

மாநாடுகள் மிகமிக அவசியம். உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம் அதைவிட அவசியமான ஒரு இயக்கமுமாகும்.

உலகில் இன்று தமிழினம் மிகவேகமாகஅழிந்துகொண்டும் அழிக்கப்பட்டுக் கொண்டும் வருகிறது. தமிழினத்தின் வாழ்வையும் சாவையும் நிர்ணயிக்கின்ற தலைமுறையாகக்காலம் நம்மைப் படைத்து விட்டிருக்கிறது. தமிழினத்தைக் காத்தே, மேம்படுத்தியே தீரவேண்டும் என்று சபதமேற்றுப் பணியாற்ற வேண்டிய காலமிது. பண்பாட்டு இயக்கத்தை இதற்கு ஒரு மிக நல்ல வழியாக, கருவியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்; தமிழினத்தின் இந்த இயக்கத்திற்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பையும் உதவியையும் தரவேண்டியது நமது தலையாய கடமை.

பண்பாட்டு இயக்க மாநாட்டிற்கு வந்திருந்த ஈழ நண்பர்களின் எழுச்சிமிக்க பேச்சுகளை ஒலிப்பதிவு செய்ததன் மூலம் நன்கு பயன்படுத்தி வருகிறேன். இலங்கையில் உமது நிலைகளைத் தெளிவாக விளக்குகின்ற, உமது உரிமைகள் மீளப்படும் வழிகளை விளக்குகின்ற மனித உரிமைகள் நசுக்கப்படுகின்ற செய்திகளைக் கொண்ட பேச்சுக்களைத் தமிழன்பர்களே ஒலிப்பதிவு செய்து எனக்கு பதிவஞ்சலில் அனுப்பும்படி வேண்டுகிறேன். திரைப்படம் பார்க்க காசு செலவு செய்கின்ற தமிழன்பர்கள், வசதிபடைத்தவர்கள் இதைச் செய்வதன் மூலம் ஈழத் தமிழர் நிலையை இங்குள்ளவர்களுக்குத் தெரிவிக்கும் அரிய பணியைச் செய்தவர்களாவீர்.

வாழ்க தமிழ்! வெல்க தமிழினம்!!


## இப்போது விற்பனையாகிறது!

# மெழுகுவர்த்தி

மேட்டுக்குடியிலே முகிழ்த்த ஒரு மனிதன், தன்னைச் சுற்றிப் படர்ந்திருந்த சுகவாழ்வையும் புவன போகங்களையும் புறக்கணித்துவிட்டு தமிழ் விடுதலைப் போரின் ஈட்டிமுனையாக மாறினான். அந்த மறவனுடன் இலட்சியப்பாதைவழியே வழித்துணை சென்ற ஒருவனின் நாட்குறிப்புகள் இது.

நூலாசிரியர்: **கரிகாலன்**

சிலம்புச் செல்வர் ம. பொ. சி. யின் மதிப்புரையுடன் கிடைக்கும் இடம்! சுதந்திரன் அலுவலகம் 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
மற்றும் எல்லா சுதந்திரன் ஏஜண்டுகளிடமும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சலுகைகளும் உரிமைகளுமல்ல

# தமிழினம் வேண்டி நிற்பது!

# விடுதலையே நம் கோரிக்கை!"

## கூட்டணி கொழும்புக் கிளை அறிவுறுத்து!

தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைகளிடையே உயிரூட்டமுடன் விளங்கும் கிளைகளில் தலைசிறந்தது கூட்டணியின் கொழும்புக்கிளையென்பது யாராலும் மறுக்கொணு உண்மையாகும். மேற்படி கிளையின் ஆண்டுக்கூட்டம் 1-4-78ல் வெள்ளவத்தை இராமகிருஷ்ண (சிறிய மண்டபத்தில்) நடைபெறுகிறது. இதையொட்டி மேற்படி கிளையின் சார்பில் அதன் செயலாளர் வெளியிட்டுள்ள ஆண்டறிக்கை பின்வருமாறு;—

ஈழம் வாழ் தமிழினம் இன்று மிக நெருக்கடியான சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறது. வாழ்வா சாவா என்ற ஏக்க நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். 25 ஆண்டு இடைவெளிக்கிடையில் இரு பெரிய இனக் கலவரங்களைக் கண்டதோடு, பல உயிர்களை இழந்தும், கோடிக்கணக்கில் உடமைகளை இழந்தும் இருள் சூழ்ந்த நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எமக்கு எதிர்காலம் உண்டோ என்பது கேள்விக்குறியாக விளங்கினும், எதிர்காலம் உண்டு எனும் நம்பிக்கையோடு தான் செயலாற்றுகின்றோம். இந்த நம்பிக்கை இல்லையெனில் எமக்கு வாழ்வு இல்லை என்பது முடிந்தமுடிவாகி விடும்.

தமிழினத்தை வழி நடாத்தக் கூடிய ஒரேயொரு இயக்கம் தமிழர் விடுதலைக்கூட்டணியே என்பது தமிழர் ஏற்றுள்ள முடிவாகும். 1977 ஜூலையில் நடைபெற்ற பொதுத் தேர்தல்—தமிழ் மக்கள் வழங்கிய தீர்ப்பு—தமிழீழம் ஒன்றுதான் தமிழினத்தை வாழ்விக்க முடியும் என்பதேயாகும். தமிழீழக் கொள்கையில் தமிழ் மக்கள் கொண்டுள்ள உறுதியை எடுத்துக்காட்ட துணை நின்ற தேர்தல், சிங்கள மக்களுக்கும் எம் நிலையைத் தெளிவாக விளக்கியதோடு, உலகின் கவனத்தையும் எம்மால் ஈர்க்கும் முறையில் அமைந்துள்ளது. ஆனல் தேர்தலில் நாம் வழங்கிய தீர்ப்புக் கொண்டு நாம் கோரி நிற்கும் தமிழீழத்தை சிங்களக் கட்சிகளோ, சிங்கள இனமோ வெள்ளித் தட்டத்தில் வைத்துப் பரிசாக வழங்கப் போவதில்லை. தந்தை செல்வாவின் கூற்றில் வைத்துக் கூறின் "தமிழீழத்தை அடைவதென்பது வில்லங்கமான காரியம் தான். ஆனல் தமிழினம் தப்பிப் பிழைக்க வேண்டுமெனில் இதைவிட வேறு வழியில்லை."

### கட்டுக் கோப்பான இயக்கம்

எம் விடுதலைப் போராட்டம் பயனுடையதாகவும், பொருளுடையதாகவும் விளங்க வேண்டின் எமக்கு ஒரு கட்டுக் கோப்பான இயக்கம் வேண்டும். ஒரு இனத்தின் விடுதலைக்குக் கொள்கைப் பற்று முக்கியமெனினும், நீண்ட விரிந்த துயர் தோய்ந்த போராட்டத்துக்கு, நாம் ஆயத்தமில்லாத நிலையில் எம் குறிக்கோளில் வெற்றியடைய முடியாது. இவை அனைத்தையும் நினைவில் கொண்டு, த. வி. கூட்டணியின் தலைமைச் செயலகம் சீரோடும் சிறப்போடும் இயங்க வேண்டின், தலைமைச் செயலகத்திற்கும் அதன் கிளைகளுக்கும் இடையில் நெருங்கிய உறவும் தொடர்பும் இருக்க வேண்டுமென வலியுறுத்தி வந்துள்ளோம்.

தமிழ் மக்களின் வேட்கைகளை உள் உணர்வுகளை எடுத்துக் காட்டும் முறையில் கிளைகள் இயங்கி தலைமைச் செயலகத்தோடு தொடர்பு கொண்டாற்ருன் ஒரு இயக்கம் வலுப் பெற்ற இயக்கமாக இயங்க முடியும். த.வி. கூட்டணியின் கொழும்புக் கிளையின் தோற்றமும் இந்த அடிப்படையிலேயே அமைந்துள்ளது. தந்தை செல்வாவின் 78 வது பிறந்த நாளையொட்டி 31 - 3 - 1976ல் கொழும்பிலுள்ள தந்தை செல்வாவின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டமே இவ்விழாவின் தொடக்க விழாவாக அமைந்தது. கிளையை தொடக்கு முன்பு ஏறக்குறைய 3 மாதமாகத்தந்தை செல்வாவின் இல்லத்தில் நாம் நடாத்தி வந்த கருத்தரங்குகள் கொழும்பில் வதியும் தமிழ் மக்களின் சிந்தனையை ஒன்றுபடுத்தவும். அரசியல் விழிப்புணர்ச்சி பெறவும் துணை நின்றன என்பது இங்குகுறிப்பிடத்தக்கது. கிளை தொடங்கிய போது 60 உறுப்பினர்கள் இருந்தனர். இப்பொழுது பல நூற்றுக் கணக்கில் உறுப்பினர் இருப்பது இயக்கவளர்ச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

### நேரடித்தொடர்பு

எம் இயக்கம் பற்றி தமிழ் மக்கள் என்ன கருதுகிருர்கள் என்பதை நாம் நடாத்துகின்ற கூட்டங்களுக்கோ, கருத்தரங்குகளுக்கோ, வருகை தருவோரை மட்டும் கொண்டு மதிப்பிடாது, அவர்களோடு நெருங்கிய தொடர்புகொள்ளும் நோக்குடன் இல்லங்கள் தோறும் சென்று, அவர்கள் எழுப்பும் கேள்விகள், ஐயங்கள் ஆகியவற்றிற்கு விடை கூறி இயக்கத்திற்கும், மக்களுக்கும் இடையில் என்றுமில்லாத அளவுபிணைப்பை ஏற்படுத்தி உள்ளோம்.

எம் கிளை ஆற்றிய மறக்க முடியாத மற்றைய பணி—எவரும் நினைவு கொள்ள வேண்டிய பணி—கிழமைகள் தோறும் நடாத்திய கருத்தரங்குகள் ஆகும். இக்கருத்தரங்குகளில் அரசியல்வாதிகள் மட்டும் கலந்துகொள்ளவில்லை. மாருகப் பல் துறை அறிஞர்களும் கலந்து கொண்டு ஆற்றிய உரைகள், குறிப்பாக பொருளாதாரம், சமூகம், கல்வி ஆகிய துறைகளில் தமக்கெனத் தனியிடம் வகித்துள்ள அறிஞர்கள் ஆற்றிய உரைகள், தமிழினம், பல்துறைகளில் சிந்திக்கவும், விழிப்புணர்ச்சியோடு செயலாற்றவும் துணை நின்றன.

### வெளிநாட்டுத் தொடர்பு

தமிழர் பிரச்சினைகளைத் தமிழர் மட்டும் அறிந்தால் போதாது என்பதை நன்குணர்ந்த நிலையில் உலகின் கவனத்தை எம்பால் ஈர்க்கும் நோக்குடன் வெளிநாட்டுத் தூதரகங்களுடனும், வெளிநாட்டுச்செய்தியாளருடனும், தொலைக்காட்சி நிருபர்களுடனும் நாம் தொடர்பு கொண்டு எம் நிலையை விளக்கி உள்ளோம். நீண்ட கால அடிப்படையில் பார்க்கையில் இத்தொடர்புகள் மிகப்பயனுடையதாக அமையும் என்பது எமது நம்பிக்கை நாம் தொடர்பு கொண்ட தூதரகங்களில் அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, இந்தியா ஆகிய தூதரகங்கள் குறிப்பிடத்தக்கவை. வெகு விரைவில் பொதுவுடமை நாட்டுத் தூதரகங்களுடன் தொடர்பு கொள்ள முயற்சி எடுத்துள்ளோம். அத்துடன் வணக்கத்துக்குரிய திசபால சூரிய அவர்களால் நடாத்தப்படும் சமய சமூக நிறுவனம் நடாத்திய அரசியல் கருத்தரங்குகளிலும் கிளைத் தலைவர் கலந்து கொண்டு குறிப்பாக சிங்களமக்களுக்கு கொள்கை விளக்கம் அளித்தமையும் குறிப்பிடத்தக்கவை. அத்துடன் அங்கு எழுப்பப்பட்ட பலவிதமான ஐயங்களுக்கும் தக்க விளக்கமும் அளிக்கப்பட்டது; இக் கருத்தரங்குகளில் நிகழ்த்திய உரைகளை ஈழத்து ஆங்கில செய்தி இதழ்களும் வெளியிட்டமை சிங்கள மக்களின் சிந்தனையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாகும்.

### ஆளும் கட்சிகள் மாறியுள்ளன, ஆனல்— ஆளும் இனத்தில் மாற்றமில்லை

இறுதியாக இங்கு நிலவும் அரசியல் சூழ்நிலையைப் பற்றியும் நாம் குறிப்பிடுதல் சாலவும் பொருத்தமுடையது. ஸ்ரீ.ல.சு.கட்சிக்குப் பதிலாக இன்று ஐ. தே. கட்சி இந்நாட்டை ஆளுகின்றது; கட்சிகள் மாறி விட்டன, ஆனல் தமிழர் பிரச்சினையைப் பொறுத்த அளவில் எதுவித தீர்வும் தோன்றுவதற்கு அறிகுறியில்லை. காரணம் ஆளும் கட்சிகள் மாறிய நிலையிலும் ஆளும் இனமாக சிங்கள இனமே விளங்குகிறது; ஆளும் இனமாக சிங்கள இனமும், ஆளப்படும் இனமாகத் தமிழினமும் இருக்கும் வரையில் தமிழினமும் இருக்கும் வரையில் தமிழினத்துக்கு விடிவோ, விடுதலையோ, வாழ்வோ,

—8-ம் பக்கம் பார்க்க

## தமிழீழத் தந்தை மூதறிஞர் அமரர் செல்வா நினைவுப்போட்டி

## பரிசு ரூபா 500-00

தமிழீழத்தந்தை மூதறிஞர் அமரர் செல்வா அவர்களின் எண்பதாவது பிறந்த நாள் எதிர்வரும் 31-3-1978 ஆகும். அதையொட்டி சுதந்திரனில் செல்வா நினைவுக் கட்டுரை, கவிதைப் போட்டிகளை நடத்த முடிவு செய்துள்ளோம்.

### போட்டி விபரங்கள்:

கட்டுரைப் போட்டி

தலைப்புக்கள்:—

"செல்வா—ஒரு சகாப்தம்"

"இலங்கை அரசியலில் செல்வா ஏற்படுத்திய தாக்கங்கள்"

"செல்வா கண்ட கனவு நனவாக நாம் என்ன செய்ய வேண்டும்?"

நிபந்தனைகள்:

(1) மேற்கண்ட தலைப்புக்களில்ஏதாவதுஒன்று பூல்ஸ்காப்தாளில் 5 பக்கங்களுக்கு மேற்படாமல் கட்டுரைகள் எழுதப்பட வேண்டும்.

(2) கட்டுரைகள் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'செல்வா நினைவுக் கட்டுரைப் போட்டி' என்று குறிப்பிட்டு ஆசிரியர் சுதந்திரன், 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

(3) தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது கட்டுரைக்கு 150 ரூபாவும், இரண்டாவது கட்டுரைக்கு 100 ரூபாவும் மூன்ருவது கட்டுரைக்கு ஐம்பது ரூபாவும் பரிசுகளாக அளிக்கப்படும்.

கவிதைப் போட்டி

தலைப்புக்கள்:—

"செல்வா பிறந்திலரேல்......"

"செல்வாவை சிந்தையிலேவை"

'செல்வாவின் நாமத்தைச் சொல்லச் சொல்ல'

நிபந்தனைகள்;

(1) மேற்கண்ட அடிகளில் ஏதாவது ஒன்றைக் கொண்ட கவிதைகள் புனையப்பட வேண்டும்.

(2) கவிதைகள் எந்த வகையினதாகவும் எழுதப்படலாம். ஆனல் 32 வரிகளுக்கு மேற்படக் கூடாது.

(3) தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது சிறந்த கவிதைக்கு நூறு ரூபாவும், இரண்டாவது. மூன்ருவது கவிதைகளுக்கு தலா ஐம்பது ரூபாவும், பரிசாக அளிக்கப்படும்.

பொதுவான சட்டதிட்டங்கள்;—

(1) சுதந்திரன் ஆசிரியரும், அவர் நியமிக்கும் குழுவும் அளிக்கும் தீர்ப்பே இப்போட்டியில் முடிவானதும், இறுதியானதாகவும் இருக்கும்.

(2) போட்டியில் இலங்கையிலும், கடல்கடந்த நாடுகளிலும் எந்தத் தமிழனும் பங்கு பற்றலாம்.

(3) போட்டிக்கு அனுப்பப்படும் கட்டுரைகள் திருப்பி அனுப்பப்பட மாட்டாது. தெரிவு செய்யப்படும் கவிதை, கட்டுரைகள் சுதந்திரனில் பிரசுரமாகும்.

(4) போட்டி முடிவுத்திகதி 5-4-1978.

(5) பரிசு பெற்ருேருக்குரிய பரிசுத்தொகை 1978, ஏப்பிரல் 26ம் திகதி நடைபெறும் தந்தை செல்வாவின் முதலாவது ஆண்டு நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் தமிழர் விடுதலை இயக்கத் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களால் வழங்கப்படும்.

(6) போட்டிக்கு அனுப்படும் கட்டுரை, கவிதைகளுடன் பின்வரும் படிவம் நிரப்பப்பட்டு இணைக்கப்பட வேண்டும்.

### தந்தைசெல்வா நினைவுப் போட்டி - 1978 -

சுதந்திரன் நடத்தும் மேற்படி போட்டியில் கலந்து கொண்டு போட்டிக்கான எனது கவிதையை/கட்டுரையை அனுப்பி வைக்கிறேன். கட்டுரை/கவிதை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

பெயர்:

முகவரி:

ஒப்பம்

திகதி:

குறிப்பு: தந்தை செல்வா நினைவுப் போட்டிக்கான பரிசுத் தொகையை லண்டன் ஈழ விடுதலை இயக்கமும் லண்டன் தமிழர் முன்னேற்றக் கழகமும் கூட்டாக அளிக்க முன்வந்துள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்ருேம்.

—ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சலுகைகளும்

—7-ம் பக்கத்தொடர்

வளமோ கிடைக்கப் போவதில்லை.

சிங்கள அரசு தமிழினத்துக்கு ஏதோ சில சலுகைகள் தருவதாகப் பாசாங்கு காட்டுகிறது. தரப்படுத்தலை நீக்குவதோ, மொழிக்கு ஏதோ தகமை வழங்குவதோ. தமிழர் சிலருக்கு தொழில் வாய்ப்பு வழங்குவதோ தமிழினத்தின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக அமைய முடியாது. இவை அனைத்தையும் தந்த நிலையிலும் எமது தாயகத்தைப் பறிக்கும் படு பாதகச்செயல் தொடரும் வரை எம் இனம் இந்நாட்டில் தலை தூக்கமுடியாது. எம் நிலப் பாதுகாப்பிலேயேஎம் இனத்தின் நிலையான பாதுகாப்புத் தங்கியிருக்கிறது. தமிழீழத்தைத் தோற்றுவிப்பதில் தாமதம் ஏற்பட்டாலும் எமது தாயகப் பாதுகாப்பில் நாம்கவலையீனமாய் இருக்க முடியாது. தமிழீழத்தின் தோற்றத்தின் அடித்தளம் எம் தாயகத்தின் எல்லைப் பாதுகாப்பிலேயே தங்கியுள்ளது, என்பதை உணர்ந்துசெயற்படுவோமாக.

## தூய்மை, தெளிவு துணிவு துணை நிற்கட்டும்.

எமது இனத்தின் விடுதலை எமது தூய தொண்டிலேயே அமைந்துள்ளது. தூய உள்ளத்தோடும், தெளிந்த சிந்தனையோடும், துடிப்போடும், துணிவோடும் நாம் செயலாற்றின் வெற்றி நமதே. எப்பொழுது எமக்கு விடுதலை கிட்டும் என அறுதியிட்டு உறுதியுடன் கூற முடியாவிடினும் எமது எதிர்ப்புணர்ச்சியைத் தளரவிடாது பேணிக் காக்க வேண்டியது எமது தலையாய கடமையாகும்.

சலுகைகள் கெஞ்சிப் பெறுவது, உரிமைகள் கேட்டுப் பெறுவது, ஆனல் விடுதலையோ நாமே நமக்கு நிலைநாட்டுவது. நாம் இன்று நாடி நிற்பது விடுதலையே. இதை நினைவில் வைத்துச் செயற்படுவோமாக.


### எமது சுதந்திரன்
விற்பனையாளர்கள்

மாவிட்டபுரம்

திரு. மு. சின்னத்துரை,
ஸ்ரீமுருகன் ஸ்டோர்ஸ்,
மாவிட்டபுரம்.

வாகரை

திருமதி வி. கந்தசாமி,
பாணிக்கபுரம்
வாகரை:

நமுனுகுல

திரு, நா. நவரெத்தினம்
பரமேஸ்வரி ஸ்டோர்ஸ்
36, பிரதான வீதி,
நமுனுகுல.

பன்குளம்

நடராசா ஸ்டோர்ஸ்
முதலிக்குளம் சந்தி,
பன்குளம்;




**பாவிருங்கள்**

றேயல் நீலத்தினைத் தயாரித்து விற்பனை செய்யும் சிவா இன்டஸ்ரீஸாரின் மற்று மோர் தயாரிப்பு

றேயல் ஜெலி கிறிஸ்டல்

மற்றும் ஏனைய தயாரிப்புகள்

றேயல் பேக்கிங்பவுடர்
றேயல் கஸ்டட் பவுடர்
றேயல் கோண் பிளவர்
றேயல் பிஸ் மக்ஸ்
றேயல் நீலம்

தயாரித்து விற்பனை செய்வோர்

**சிவா இண்டஸ்றீஸ்**


112 1/3 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

**செல்லமகால்**
(கொட்டாஞ்சேனை)

4-வது வாரம்

எம். ஜி. ஆர். (இரு வேடங்களில்)
வாணிஶ்ரீ, நிர்மலா, பி. எஸ். வீரப்பா,
தேங்காய் ஸ்ரீனிவாசன் மற்றும் பலர் நடித்த—

**ஊருக்கு உழைப்பவன்**



**கெயிட்டி**
[கொட்டாஞ்சேனை]

25-ம் திகதி முதல்

எஸ். எஸ் ராஜேந்திரன்
விஜயகுமாரி நடித்த—

**நீங்காத நினைவு**

31ம் திகதி முதல்

**வாடைக்காற்று**

**கிங்ஸ்லி**
(கொழும்பு)

3-வது வாரம்

ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா நடித்த

**ஜானகி சபதம்**

**கெப்பிட்டல்**
(கொழும்பு)

8வது வாரம்-

**விஜயா** (மட்டுநகர்)

கே. ஆர். விஜயா-ஜெய்சங்கர் நடித்த-

**மேயர் மீனாட்சி**

2-வது வாரம்

**வெலிங்டன்** (யாழ்நகர்)    **பிளாஸா** (வெள்ளவத்தை)

சிவாஜி, கே. ஆர். விஜயா நடித்த—

**கிரகப்பிரவேசம்**
(கலர்)

6-வது வாரம்

**சமந்தா** (கொழும்பு)    **லிடோ** (யாழ்நகர்)

முத்துராமன், சுஜாதா, சிவகுமார்
பத்மபிரியா -நடித்த

**உறவு சொல்ல ஒருவன்**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 12, 194 ஏ. பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு